தினமணி

**கிராம அளவில் வேளாண் பயிர் காப்பீடு திட்டம் அமல் எப்போது?**

ப. இசக்கி

First Published : 08 Nov 2010 01:29:14 AM IST

திருநெல்வேலி : தேசிய வேளாண்மை பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை கிராம அளவில் செயல்படுத்த வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கை கானல் நீராகவே தொடர்கிறது.

பருவ மழை குறைவு, பயிர்களில் நோய்த் தாக்குதல் போன்றவற்றால் நாளுக்குநாள் அதிகமான பாதிப்பை எதிர்கொள்ளும் விவசாயிகளுக்கு இந்த திட்டத்தை கிராம அளவில் செயல்படுத்த வேண்டியது மிகவும் அவசியம்.

புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கைச் சீற்ற பாதிப்பு ஏற்படும்போதும், பூச்சி மற்றும் நோயினால் பயிருக்குச் சேதம் ஏற்படும்போது விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருக்க காப்பீடு மற்றும் நிதியுதவி அளிப்பது, விவசாயத்தில் முற்போக்கான நவீன தொழில்நுட்பங்கள், வேளாண் வழிமுறைகள் மற்றும் அதிக விலையுள்ள இடுபொருள்களைப் பயன்படுத்த ஊக்கப்படுத்துதல், பெரும் பயிர்ச் சேதம் ஏற்படும் காலங்களில் பண்ணை வருமானத்தை நிலைப்படுத்துதல்,உணவு மற்றும் எண்ணெய் வித்து பயிர்களின் உற்பத்தியைப் பெருக்குதல் மற்றும் ஊக்கமளித்தல் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் நோக்கங்களாகும்.

இந்த திட்டத்தின் கீழ் நெல், கம்பு, மக்காச்சோளம், கேழ்வரகு,உளுந்து,பச்சை பயறு, துவரை,நிலக்கடலை,எள்,கரும்பு, பருத்தி, உருளைக் கிழங்கு, மிளகாய், வெங்காயம்,இஞ்சி,மஞ்சள்,மரவள்ளிக்கிழங்கு,வாழை போன்றவற்றை காப்பீடு செய்யலாம். இதில்,சொந்த நிலம் உள்ள விவசாயிகளும், குத்தகை விவசாயிகளும் பங்கேற்கலாம்.

எந்த வகையான பயிர்க் கடன் பெறுபவராக இருந்தாலும் அவர்கள் கட்டாயமாக இந்த திட்டத்தில் சேர்க்கப்படுவார்கள். மற்றவர்கள் விருப்பத்தின் அடிப்படையில் திட்டத்தில் சேரலாம். வங்கிகளில் பயிர்க் கடன் பெறும்போதே காப்பீடு பிரிமீயத் தொகை பிடித்தம் செய்யப்படும்.

பயிர்க் காப்பீடு திட்டத்தை விவசாயிகளிடம் பிரபலப்படுத்தவும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் காப்பீடு பிரிமீயத் தொகையில், கடன் பெறும் விவசாயிகளுக்கு 50 சதவீதத்தையும்,கடன் பெறாத விவசாயிகளில் சிறு, குறு விவசாயிகளுக்கு 55 சதவீதத்தையும்,இதர விவசாயிகளுக்கு 50 சதவீதத்தையும் தமிழக அரசே செலுத்தி வருகிறது. காப்பீட்டுத் தொகையையும் மத்திய, மாநில அரசுகள் தலா 50 சதவீதமாக வழங்குகின்றன.

தமிழ்நாட்டில் கடந்த 2002 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வரும் இந்த திட்டமானது, முதலில் வட்டார அளவில் செயல்படுத்தப்பட்டது. அதாவது, பயிர்ச் சேதம் ஏற்பட்டால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்காக அந்த வட்டாரத்தில் குறிப்பிட்ட

இடங்களில் பயிர் அறுவடை பரிசோதனை செய்யப்படும். இந்த பரிசோதனையை வேளாண்மை துறையினரும், புள்ளியியல் துறையினரும் மேற்கொள்வர்.

உதாரணமாக,நெல் பயிராக இருந்தால் கடந்த 3 ஆண்டுகளின் சராசரி மகசூல் அளவு மற்றும் பாதிப்பு ஏற்பட்ட ஆண்டின் மகசூல் அளவை ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அளிப்பார்கள். அதன் அடிப்படையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்படும். இதற்காக, மத்திய அரசானது இந்திய வேளாண் காப்பீடு நிறுவனத்தை (அக்ரிகல்சர் இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா லிட்) ஏற்படுத்தியுள்ளது.

காப்பீடு திட்டமானது வட்டார அளவில் செயல்படுத்தப்பட்டதால் ஒரு குறிப்பிட்ட கிராமத்தில் பாதிப்பு ஏற்பட்டு இதர பகுதிகளில் பாதிப்பு இல்லை என்றால் பயிர் அறுவடை சோதனை முடிவு விவசாயிகளுக்குச் சாதகமாக அமையாது. எனவே, காப்பீடு திட்ட பயன் விவசாயிகள் எதிர்பார்த்தபடி கிடைக்காமல் இருந்தது. ஆதலால், காப்பீடு திட்டத்தில் சேருவதற்கு விவசாயிகள் அவ்வளவாக ஆர்வம் காட்டவில்லை. எனவே, இந்த திட்டமானது கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் குறுவட்டம் (பிர்க்கா) அளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் விவசாயிகள் ஓரளவு பயன்பெற்று வருகின்றனர். எனினும் முழுமையான பயன் கிட்டவில்லை.

திருநெல்வேலி மாவட்டத்தில் 2008-09ல் 38 விவசாயிகளுக்கு காப்பீடு தொகையாக | 38,148 வழங்கப்பட்டுள்ளது. 2009-10 கார் பருவத்தில் 201 விவசாயிகளுக்கான |13.08 லட்சத்தில் 50 சதவீத தொகையான |6.54 லட்சத்தை மத்திய அரசு வழங்கி விட்டது. மாநில அரசு இன்னும் வழங்கவில்லை. அதே ஆண்டில் பிசானப் பருவத்தில் 5,508 விவசாயிகளுக்கு |11.69 லட்சம் காப்பீட்டுத் தொகை வழங்க கருத்துரு அனுப்பப்பட்டுள்ளதாக வேளாண்மை துறை வட்டாரங்களில் கூறப்படுகிறது. வேளாண்மை பிரதானத் தொழிலாக உள்ள இம் மாவட்டத்தில் இந்த திட்டத்தால் பயன்பெறும் விவசாயிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பது இதன் மூலம் தெரிய வருகிறது.

இந்த ஆண்டின் கார் பருவத்தில் ஆழ்வார்குறிச்சி பகுதியில் சுமார் 3 ஆயிரம் ஏக்கரில் குருத்துப் பூச்சி நோய்த்தாக்குதல் ஏற்பட்டு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்துள்ளவர்கள் மிகவும் குறைவு. ""காப்பீடு திட்டத்தை கிராம அளவில் அமல்படுத்தினால் மட்டுமே அதில் விவசாயிகள் ஆர்வமுடன் சேருவார்கள். திட்டத்தின் நோக்கமும் முழுமையாக நிறைவேறும்" என்கிறார் மாவட்ட விவசாயிகள் சங்கத் தலைவர் ஆர். கசமுத்து.

அண்மையில் குற்றாலத்தில் நடைபெற்ற அரசு விழாவில் பேசிய வேளாண்மை துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம், பயிர் காப்பீடு திட்டத்தை கிராம அளவில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அங்கு கூடியிருந்த விவசாயிகளுக்கு மத்தியில் உறுதி அளித்தார். ஆனால் அதற்கான முறையான அரசு அறிவிப்பு இதுவரையில் வரவில்லை.

பயிர்க் காப்பீடு திட்டத்தை கிராம அளவில் செயல்படுத்த இன்னும் இரண்டு, மூன்று ஆண்டுகள் ஆகலாம். வேளாண்மைத் துறை மற்றும் புள்ளியியல் துறையில் போதுமான எண்ணிக்கையில் ஆள்கள் இருந்தால்தான் அதைச் செயல்படுத்த முடியும் என்கின்றனர் காப்பீடு நிறுவனத்தினர். எனவே, அரசு உரிய நடவடிக்கை மேற்கொண்டு பயிர்க் காப்பீடு திட்டத்தை கிராம அளவில் செயல்படுத்த வேண்டும் என்பதே விவசாயிகளின் எதிர்பார்ப்பு.

**பூண்டி ஏரியில் நீர்மட்டம் உயர்வு**

First Published : 08 Nov 2010 05:59:23 AM IST

திருவள்ளூர், நவ. 7: "ஜல்' புயலால் நீடித்து வரும் மழை காரணமாக பூண்டி ஏரியின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது.

÷சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய ஏரிகளில் ஒன்றான பூண்டி ஏரியில் கடுமையான கோடை வெயில் காரணமாக கடந்த செப்டம்பர் மாதம் வரை மொத்தம் உள்ள 35 அடி நீர் மட்டத்தில் 24 அடி வரை நீர்மட்டம் குறைந்தது. இதையடுத்து அக்டோபர் மாதம் ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டதில் இருந்து பூண்டி ஏரிக்கு நீர்வரத்து அதிகரித்தது. ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி கிருஷ்ணா கால்வாயில் நீர்வரத்து வினாடிக்கு 995 கன அடியாக உள்ளது. மழை அதிகரித்தால் கால்வாயில் நீர்மட்டம் மேலும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

÷தற்போது பூண்டி ஏரியில் மொத்தம் உள்ள 35 அடி உயரத்தில் 31.4 அடி நீர்மட்டம் உள்ளது. பூண்டி ஏரியில் இருந்து புழல் ஏரிக்கு இணைப்புக் கால்வாய் வழியாக வினாடிக்கு 435 கன அடி நீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

÷மாவட்டத்தில் மழை அளவு (மில்லி மீட்டரில்): சோழவரம் 15, பொன்னேரி 15, செம்பரம்பாக்கம் 12, செங்குன்றம் 10, தாமரைப்பாக்கம் 7, திருவொற்றியூர் 7, கும்மிடிப்பூண்டி 5, பூந்தமல்லி 5, பூண்டி 5, பள்ளிப்பட்டு 3, திருவாலங்காடு 2, திருத்தணி 2, ஆர்கே.பேட்டை 1 மற்றும் ஊத்துக்கோட்டை 1 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

**மக்காச்சோளம் விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி**

First Published : 07 Nov 2010 10:49:42 AM IST

கோபி, நவ. 6: மக்காச்சோளம் விலை உயர்வு காரணமாக விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கோபி, டி.என்.பாளையம் மற்றும் நம்பியூர் வட்டாரங்களில் இருந்து நாமக்கல், கோவை மாவட்டங்கள் மற்றும் கேரளத்திற்கு அதிக அளவில் மக்காச்சோளம் அனுப்பபடுகிறது.

சேலம், நாமக்கல், ஈரோடு மற்றும் கோவை மாவட்டத்தில் உள்ள கோழிப் பண்ணைகளுக்கு இவை அனுப்பப்படுகின்றன.

கோழித் தீவனத்துக்கு முக்கிய மூலப் பொருளாகவும், உணவுப் பொருளாகவும் மக்காச்சோளம் அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது.

ஈரோடு மாவட்டத்தில் கோ-1, கோ.எச். (எம்) ஆகிய மக்சாச்சோள ரகங்கள் இரவை மற்றும் மானாவாரி காலங்களில் அதிக அளவில் பயிரிடப்படுகிறது.

மானாவாரி நிலமாக உள்ள நிலங்களில், கிணற்றுப் பாசனத்தை நம்பி விவசாயிகள் பருத்தி, எள், புகையிலை போன்ற பயிர்களை அதிக அளவில் பயிரிடுகின்றனர்.

போதிய வருமானம் இல்லாததாலும், ஆள்கள் பற்றாக்குறையாலும் மக்காச்சோளம் பயிரிடுவதில் விவசாயிகள் தயக்கம் காட்டினர். ஆனால், தற்போது அந்நிலை மாறியுள்ளது.

நான்கு மாதப் பயிரான மக்காச்சோளத்தை, எந்தப் பட்டத்திலும் பயிர் செய்யலாம். நுண்ணூட்ட மருந்துகளை அதிகமாகப் பயன்படுத்த வேண்டிய தேவை இல்லை. ஒரு ஏக்கருக்கு 30-லிருந்து 35 மூட்டை வரை மகசூல் கிடைக்கிறது.

கோபி, டி.என்.பாளையம், நம்பியூர், பங்களாபுதூர், கள்ளிப்பட்டி, அத்தாணி, கணக்கம்பாளையம், கூகலூர், பாரியூர், கொளப்பலூர், சிறுவலூர், குருமந்தூர், கடத்தூர் உள் ளிட்ட பகுதிகளில், நடப்பு போகத்தில் மக்காச்சோளம் அதிக அளவில் பயிரிடப்பட்டது.

தற்போது, கடந்த சாகுபடியைவிட கூடுதல் விலை கிடைக்கிறது.

முன்பு ஒரு டன் மக்காச் சோளத்துக்கு ரூ. 750 முதல் 900 வரை கிடைத்தது. தற்போது, ரூ. 900 முதல் 1,200 வரை கிடைக்கிறது. இதனால் மக்காச்சோளம் பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**கொப்பரை வரத்துக் குறைவு**

First Published : 07 Nov 2010 10:32:41 AM IST

கோபி, நவ. 6: கோபி பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு கொப்பரைத் தேங்காய் வரத்து குறைந்தது.

கோபியில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வாரந்தோறும் கொப்பரைத் தேங்காய் ஏலம் நடைபெறும். இதில், கோபி, கலிங்கியம், அயலூர், கோட்டுப்புள்ளாம்பாளையம், அளுக்குளி, சிறுவலூர், வெள்ளாங்கோவில் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள், கொப்பரைத் தேங்காய்களைக் கொண்டு வருவர்.

அங்கு வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு, 38 விவசாயிகள் 156 மூட்டை கொப்பரை தேங்காய் கொண்டு வந்தனர். அதிகபட்சமாக ஒரு குவிண்டால்

ரூ. 4 ஆயிரத்து 728-க்கு விலை போனது. குறைந்தபட்சமாக குவிண்டாலுக்கு ரூ. 4 ஆயிரத்து 369-க்கு விற்கப்பட்டது. சராசரியாக கிலோ ரூ. 46.68-க்கு விற்பனையானது. ஏலத்தில் திருப்பூர் வியாபாரிகள் அதிகமானோர் கலந்து கொண்டனர். கோபி பகுதியில் கடந்த சில நாள்களாக பெய்த மழையால், தேங்காயைக் காய வைக்க முடியாமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர்.

இதனால், கடந்த வாரத்தைவிட, இந்த வாரம் 100 மூட்டைகள் குறைவாகவே வந்திருந்தன.

மேலும், தேங்காய் எண்ணெய் விலை குறைந்ததே, கொப்பரைத் தேங்காய் விலையும் குறையக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது. சில வாரங்களுக்கு முன் 15 கிலோ கொண்ட தேங்காய் எண்ணெய், 1 பீப்பாய் ரூ. 1,055-க்கு விற்கப்பட்டது. கடந்த வாரம் ரூ. 1,030-க்கும், இந்த வாரம் ரூ. 1,010-கும் விற்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**வேளாண் கருவிகளை இயக்க விவசாயிகளுக்கு பயிற்சி**

First Published : 07 Nov 2010 11:02:51 AM IST

சேலம், நவ. 6: சேலம் மாவட்டத்தில் வேளாண்மைக் கருவிகள், இயந்திரங்களை இயக்கவும், பராமரிக்கவும் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையுடன் கூடிய பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளன.

ஒரு வாரம் நடைபெறும் இந்த பயிற்சியில், எழுதப் படிக்கத் தெரிந்த, 18 முதல் 40 வயதுக்கு உள்பட்ட விவசாயிகள், வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் கலந்து கொள்ளலாம்.

வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம், மானிய விலையில் வேளாண் கருவிகள், இயந்திரங்கள் வாங்கிய விவசாயிகளுக்கும், ஊரக வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். பயிற்சி தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு, கீழ்க்கண்ட அலுவலகங்களை வரும் 19-ம் தேதிக்குள் தொடர்பு கொள்ளலாம். தங்களது பெயரைப் பதிவு செய்து கொள்ள, சேலம் வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளரைத் தொடர்பு கொள்ளலாம்.

சேலம், வாழப்பாடி, அயோத்தியாப்பட்டணம், ஏற்காடு, வீரபாண்டி, பனமரத்துப்பட்டி வட்டார விவசாயிகள், ஏற்காடு மெயின் ரோட்டில் உள்ள வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளரையும், ஓமலூர், காடையாம்பட்டி, தாரமங்கலம், மேச்சேரி, நங்கவள்ளி, கொளத்தூர் வட்டார விவசாயிகள், குஞ்சாண்டியூர் உதவி செயற்பொறியாளரையும் தொடர்பு கொள்ளலாம்.

பெத்தநாயக்கன்பாளையம், ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி வட்டார விவசாயிகள், ஆத்தூர் 60 அடி சாலையில் உள்ள உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தையும், சங்ககிரி, மகுடஞ்சாவடி, எடப்பாடி, கொங்கணாபுரம் வட்டார விவசாயிகள், சங்ககிரி சேலம் ரோடு பகுதியில் உள்ள உதவி செயற்பொறியாளரையும் தொடர்பு கொள்ளலாம்.

**சம்பா பயிருக்கு காப்பீட்டுத் திட்டம்: மத்திய கூட்டுறவு வங்கி வேண்டுகோள்**

First Published : 07 Nov 2010 02:52:17 PM IST

கடலூர், நவ. 6: கடலூர் மாவட்ட விவசாயிகள் தங்களது சம்பா நெல் பயிருக்கு, காப்பீடு செய்து கொள்ளுமாறு, கடலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி வேண்டுகோள் விடுத்துள்ளது.

மத்தியக் கூட்டுறவு வங்கித் தனிஅலுவலர் ந.மிருணாளினி வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கடலூர் மாவட்டத்தில் சம்பா, தாளடி, பிசானம் நெல் பயிருக்கு பயிர் காப்புறுதி திட்டத்தை நடப்பு ஆண்டில் செயல்படுத்த, இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

இதன்படி சம்பா நெல் பயிருக்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களில் கடன் பெற்ற விவசாயிகள், பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் 1-8-2010 முதல் 31-12-2010 வரை காப்பீடு செய்து கொள்ளலாம். கடன் பெறாத விவசாயிகளும் சம்பா நெல் பயிருக்கு 1-8-2010 முதல் 15-12-2010 வரை காப்பீடு செய்துகொள்ளலாம்.

காப்பீடு செய்து கொள்ளும் தொகைக்கு 2 சதவீத பிரீமியம் செலுத்த வேண்டும். பிரீமியத் தொகையில் 50 சதவீதத்தை சிறு, குறு விவசாயிகளுக்கு அரசு மானியமாக வழங்குகிறது. கடன்பெறாத விவசாயிகளுக்கு பிரீமியத் தொகையில் 55 சதவீதத்தையும், இதர விவசாயிகளுக்கு 50 சதவீதத்தையும் அரசு மானியமாக வழங்குகிறது.

எனவே விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களை அணுகி சம்பா நெல் பயிருக்கு காப்பீடு செய்து பயன் அடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்றும் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**பயிர்க் காப்பீட்டுத் திட்டம்: விவசாயிகளுக்கு அழைப்பு**

First Published : 07 Nov 2010 01:08:54 PM IST

கரூர், நவ. 6: தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் இணைய விவசாயிகளுக்கு மத்திய அரசு நிறுவனமான இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனத்தின் (அக்ரிகல்சர் இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்) மண்டல மேலாளர் சி. அன்பரசு அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

விவசாயத்தில் ஏற்படும் பாதிப்புகள், இழப்பீடுகளிலிருந்து விவசாயிகளை காக்க, இந்திய அரசு மாநில அரசுகளுடன் உதவியுடன் இந்திய வேளாண் (விவசாய) காப்பீடு நிறுவனத்தை (ஏஐசி) நிறுவியுள்ளது.

இந்த நிறுவனத்தின் மூலமாக பயிர்களை காப்பீடு செய்ய (கடன் பெறா விவசாயிகள்) வங்கியில் சேமிப்பு கணக்கு வைத்திருக்க வேண்டும். வங்கிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு

வங்கி மற்றும் விவசாயத் துறையிடம் கிடைக்கும் ஏஐசியின் கடன்பெறா விவசாயிகள் கோரும் விண்ணப்பத்தினை நிறைவு செய்ய வேண்டும். தங்களின் நிலம், பயிரிடும் பயிருக்கான விவரங்களை வங்கியில் தெரிவிக்க வேண்டும். வங்கி சேமிப்பு கணக்கு மூலமாக காப்பீட்டு கட்டணத் தொகையை செலுத்தலாம்.

இந்த ஆண்டும் (2010) நெல் சம்பாவிற்கு பயிர்க் கடன் பெறா விவசாயிகள் சேர்வதற்கான இறுதி நாள் 15.12.2010 என்றாலும் கூட வெள்ளம், வறட்சி ஆகியவை முன்கூட்டியே தெரிந்தால் முன்கூட்டியே பிரீமியம் செலுத்துவது நிராகரிக்கப்படும்.

எனவே, வங்கிகளும், விவசாயிகளும் நேரம் தாழ்த்தாமல் இத்திட்டத்தில் உடனடியாக சேருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நெல் சம்பா பயிருக்கு ஒரு ஏக்கருக்கு சாதாரணப் பிரீமியம் 55 சத மானியம் போக, சிறுகுறு விவசாயிகளுக்கு | 117-ம், ஏனைய விவசாயிகளுக்கு 50 சத மானியம் போக | 130 மட்டுமே செலுத்த வேண்டும். இதன் மதிப்பு | 13,024.

பயிர் கடன் பெறா விவசாயிகள் விருப்பத்தின் பேரில் கூடுதல் பிரீமியத்தை இதனுடன் சேர்த்து செலுத்தினால் பலன் அதிகமாக கிடைக்கும். ஏக்கருக்கு கூடுதல் பிரீமியமாக சிறு, குறு விவசாயிகள் | 456-ம், ஏனைய விவசாயிகள் | 507-ம் செலுத்தலாம். சாதாரண, கூடுதல் பிரீமியம் செலுத்த விரும்பும் சிறு, குறு விவசாயிகள் | 574-ம், ஏனைய விவசாயிகள் | 637-ம் ஏக்கருக்கு செலுத்தலாம். எனவே, விவசாயிகள் இந்தத் திட்டத்தில் சேர்ந்து பயனடைய வேண்டுமென கேட்டுக்கொண்டுள்ளார்.

**"வடகிழக்குப் பருவ மழை காலத்தில் மிளகாய் விதைத்துப் பயன்பெறலாம்'**

First Published : 07 Nov 2010 01:25:45 PM IST

தஞ்சாவூர், நவ. 6: வடகிழக்குப் பருவ மழை காலத்தில் மிளகாய் விதைத்து விவசாயிகள் பயன்பெறலாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தஞ்சாவூர் மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) தி. பாலசுப்பிரமணியன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழகத்தில் தற்போது விருதுநகர் சம்பா மிளகாய் வற்றல் குவிண்டாலுக்கு | 3,500 வரையும், குளிர்பதனக் கிடங்குகளில் வைக்கப்பட்டுள்ள மிளகாய் குவிண்டால் | 4,500 வரையும் விற்பனை செய்யப்படுகின்றன.

மிளகாய் பயிரிடும் விவசாயிகள், நடப்பு பருவத்தில் மிளகாய் பயிரிடலாமா அல்லது வேறு பயிர்கள் பயிரிடலாமா என்ற யோசனையில் இருக்கின்றனர்.

விவசாயிகளின் நலனைக் கருதி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமை திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம், கடந்த 13 ஆண்டுகளாக விருதுநகர் சந்தையில் நிலவிய விலையை ஆய்வு செய்துள்ளது.

அதனடிப்படையில், பிப்ரவரி, மார்ச் (2011) மாதங்களில் அறுவடை செய்து சந்தைக்கு புதிதாக வரும் மிளகாய் வற்றல் குவிண்டால் | 3,700 வரை விற்பனையாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்கூறிய விலையை கருத்தில் கொண்டு, விவசாயிகள் வடகிழக்குப் பருவ மழைக் காலத்தில் மிளகாய் பயிர் செய்து நல்ல லாபத்தை பெறலாம்.

**செம்மைநெல் சாகுபடி பயிற்சி முகாம்**

First Published : 07 Nov 2010 02:34:47 PM IST

திருவண்ணாமலை, நவ. 6: திண்டிவனம் எண்ணெய் வித்துகள் ஆராய்ச்சி நிலையம் சார்பில் மெய்யூர் கிராமத்தில் ராஜராஜன் 1000 செம்மைநெல் சாகுபடி பயிற்சி முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

துறிஞ்சலாறு உபவடி நீர் பகுதியில் உலக வங்கி நிதியுதவியுடன்
|1.05 கோடியில் வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. செம்மைநெல் சாகுபடியை பின்பற்றுவதால் உண்டாகும் நன்மைகள், அதிக மகசூல், குறைந்த நீர்த்தேவை, நவீன தொழில்நுட்ப முறைகள், தரமான விதைகளை தேர்வு செய்தல் குறித்து ஆராய்ச்சி நிலையத் தலைவர் என்.ராமமூர்த்தி விளக்கினார். நெல் சாகுபடி குறித்து திட்ட விஞ்ஞானி ரமேஷ் செயல்முறை விளக்கம் அளித்தார்.

வீடூர் அணைக்கட்டு நீர்ப்பாசன சங்கத் தலைவர் மணவாளன், மெய்யூர் நீர்ப்பாசன சங்கத் தலைவர் டி.கந்தன், ஆராய்ச்சியாளர் பி.அமலா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தினமலர்

**மதிப்பூட்டப்பட்ட உணவுகள் தயாரித்தல் பயிற்சிமுன் பதிவு செய்ய வேளாண் அதிகாரி வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2010,02:43 IST

விருத்தாசலம்:விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெற உள்ள மீன் வகைகளில் இருந்து மதிப்பூட்டப் பட்ட உணவுகள் தயாரித் தல் பயிற்சியில் கலந்து கொள்ள ஆர்வம் உள்ளவர் கள் பெயரை பதிவு செய்து கொள்ளலாம்.விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர் சுப்ரமணியன் விடுத்துள்ள செய் திக்குறிப்பு:
விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் சி.ஐ.எப்.டி., கொச்சின் உதவியுடன் மீன் வகைகளில் இருந்து மதிப் பூட்டப்பட்ட உணவு தயாரித்தல் பயிற்சி வழங்கப் பட உள்ளது.

வரும் டிசம்பர் 8, 9 தேதிகளில் நடைபெற உள்ள இப்பயிற்சியில் பண்ணை மகளிர், மகளிர் சுய உதவி குழுக்கள், கிராம புற இளைஞர்கள், வேலையில்லா பட்டதாரிகள், பள்ளி படிப்பை பாதியில் விட்டவர்கள், தொழில் முனைவோர் பயிற்சி பெறலாம்.காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும் பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு மதிய உணவு, தேனீர் மற்றும் பயிற்சி கையேடு இலவசமாக வழங்கப்படும்.பயிற்சிக்கு முதலில் வரும் 30 பேர் மட்டுமே தேர்வு செய்யப்படுவதால் பயிற்சியில் கலந்து கொள்ள ஆர்வம் உள்ளவர் கள் முன்கூட்டியே தங் களது பெயரினை வரும் 30ம் தேதிக்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும். இணைபேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண்மை அறிவியல் நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், விருத்தாசலம், கடலூர் மாவட்டம் என்ற முகவரிக்கு கடிதம் மூலமாகவோ அல்லது 04143- 238353 என்ற எண்ணிற்கு தொலைபேசி மூலமாகவோ தங்கள் பெயரை பதிவு செய்யலாம். நேரில் வந்தும் பதிவு செய்யலாம் என செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**டெல்டா பகுதியில் மழை குறைவுநெற்பயிர்கள் தப்பின**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2010,02:51 IST

கடலூர்:டெல்டா பாசனப் பகுதியில் நேற்று மழை குறைவாக பெய்ததால், நடவு செய்துள்ள நெற்பயிர்கள் தப்பின.வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள "ஜல்' புயல் காரணமாக கடலூர் மாவட்டத்தில்

கடலூர் - பரங்கிப்பேட்டைக்கு இடைப்பட்ட கடலோர பகுதிகளில் நேற்று காலை முதல் பலத்த மழை பெய்தது. பிற பகுதிகளில் மிதமான மழையே பெய்தது. குறிப்பாக டெல்டா பாசனப் பகுதியில் குறைந்த அளவே மழை பெய்ததால் நெற்பயிர்கள் மழை பாதிப்பில் இருந்து தப்பின.

**கடலூர் பகுதியில்2,000 ஏக்கர்பயிர்கள் மூழ்கின**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2010,02:54 IST

கடலூர்:ஜல் புயலால் கடலூர் பகுதியில் 2,000 ஏக்கர் பயிர்கள் மூழ்கின.கடலூர் பகுதியில் நேற்று பெய்த கன மழை காரணமாக 2,000 ஏக்கர் நெற்பயிர்கள் நீரில் மூழ்கின. இருப்பினும் பாதிப்பு ஏதும் ஏற்பட வாய்ப்பில்லை என வேளாண் அதிகாரி தெரிவித்தார்.

**சம்பா சாகுபடி செய்யும் விவசாயிகள் பயிர்காப்பீடு செய்து பயன் பெற வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2010,02:37 IST

கடலூர்:கடலூர் மாவட்டத்தில் சம்பா நடவு செய்யும் விவசாயிகள் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்து பயனடைய கேட்டுக் கொண்டுள்ளனர்.இது குறித்து கடலூர் மாவட்ட கூட்டுறவு சங்கங் களின் தனி அலுவலர் மிருணாளினி விடுத்துள்ள செய்திக்குறிப்பு:கடலூர் மாவட்டத்தில் சம்பா பயிர் காப்புறுதித் திட்டத்தை நடப்பு ஆண் டுக்கு செயல்படுத்தலாம் என இந்திய வேளாண்மை காப்பீட்டு நிறுவனத்தாரால் அறிவிக்கப்பட் டுள்ளது. இதன்படி மாவட் டத்தில் நெல் சம்பா பயிருக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் விவசாயிகள் பெற்ற கடன் தொகையை பயிர் காப்பீட்டுத் திட்டத் தில் 1.8.10 முதல்31.12.10 தேதி வரை காப்புறுத்தி செய்து கொள்ளலாம்.கடன் பெறாத விவசாயிகள் சம்பா நெல் பயிருக்கு 1.8.10 தேதி முதல் 15.12.10 தேதி வரை காப்புறுதி செய்து கொள்ளலாம்.

காப்புறுதி செய்து கொள் ளும் தொகைக்கு 2 சதவீதம் பிரிமியம் செலுத்த வேண்டும்.பிரிமிய தொகையில் சிறு, குறு விவசாயிகள் கடன் பெற்ற நபர்களுக்கு அரசால் 50 சதவீதம் மானியம் வழங்குகிறது. கடன் பெறாத சிறு, மற்றும் குறு விவசாயிகளுக்கு பிரிமிய தொகையில் 55 சதவீதமும், இதர விவசாயிகளுக்கு 50 சதவீதமும் மானியமாக வழங்கப்படுகிறது. எனவே விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை அணுகி நெல் சம்பா பயிருக்கு பயிர் காப்புறுதி செய்து பயன் அடையுமாறு கேட்டுக் கொள்கிறோம்.இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

குறைந்தளவு நீரில் கூடுதல் மகசூல் சொட்டு நீர் பாசன சாகுபடி முறை

பதிவு செய்த நாள் : நவம்பர் 07,2010,02:33 IST

விழுப்புரம் : குறைந்த அளவு தண்ணீரைக் கொண்டு கூடுதல் மகசூல் பெற சொட்டு நீர்ப்பாசனம் முறையை பயன்படுத்த விவசாயிகள் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். விவசாயிகள் சாகுபடி செய்யும் பெரும்பாலான காய்கறிகள் மற்றும் பழப்பயிர்களின் நீர் மற்றும் சத்துகளை உறிஞ்சும் செயல்திறன் மிக்க வேர்கள் மண்ணின் மேல்மட்டத்திலிருந்து ஒரு அடி ஆழத்தில் உள்ளது. நீர்பாசனம் செய்யும் போது மண் ணின் மேற்பரப்பு ஈரமாகவும், சத்துகள் உள்ளவாறும் பராமரித்தால் பயிர்கள் நன்கு வளர்ச்சி அடையும். சொட்டு நீர் பாசனத்தின் மூலம் தேவைப்படும் இடம் மற்றும் போதுமான அளவில் மண்ணின் மேற்பரப்பு ஈரமாக்கப்படுவதுடன் பயிருக்கு தேவைப்படும் சத்துகளை பயிர் களின் செயல்திறன் மிக்க வேர்கள் உள்ள இடத்திலேயே கிடைக்கிறது.

இம்முறையினால் தண்ணீர் சிக்கனம், களை கட்டுப்பாடும் ஏற்பட்டு கூடுதல் மகசூல் கிடைக்கிறது. சொட் டுநீர் பாசனத்தை பயன்படுத்தி கோலி யனூர் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த பிடாகம் பகுதியில் விவசாயி ராஜா இரண்டரை ஏக்கர் பரப்பளவில் உஜாலா மற்றும் முள் கத்தரி பயிர் செய்துள்ளார். அதே பகுதியில் விவசாயி ஜோதி பிரகாசம் என்பவர் ஒரு ஏக்கர் பரப்பளவில் சொட்டுநீர் பாசனம் மூலம் வெண்டை சாகுபடி செய்துள்ளனர்.

இவற்றை பார்வையிட்ட தோட்டக்கலை துணை இயக் குனர் பன்னீர்செல்வம், கோலியனூர் தோட்டக்கலை உதவி இயக்குனர் வீராசாமி ஆகியோர் கூறியதாவது: ஒரு ஏக்கருக்கு தேவைப்படும் தண்ணீரைக் கொண்டு சொட்டு நீர் பாசனம் மூலம் இரண்டரை ஏக்கர் வரை சாகுபடி செய்யலாம். வாய்க் கால் மூலம் தண்ணீர் பாய்ச்சினால் 40 சதவீதம் வரை நீர் இழப்பினை தடுக்கலாம். சொட்டு நீர் பாசனம் செய்வதன் மூலம் பயிரின் வேர்களைச் சுற்றியும் 60 சதவீதம் ஈரப்பதமும், 40 சதவீதம் காற்றோட்டமும் நிலை நிறுத் தப்பட்டு பயிரின் வேருக்கு அருகில் உரம் மற்றும் நீர் கிடைப்பதால், பயிரின் வேர் மற்றும் தழை வளர்ச்சி கூடுதலாகி மகசூலும் அதிகளவில் கிடைக்கிறது. இதனால் பயிர்களில் பூச்சி மற்றும் நோய் தாக்கும் அளவும் குறைவாக உள்ளது.

சொட்டுநீர் பாசனத்தின் மூலம் மா, கொய்யா, சப்போட்டா, மாதுளை வாழை, எலுமிச்சை, பப் பாளி, கத் தரி, வெண்டை, தக்காளி, மிள காய் மற்றும் பூசணி வகைகள் பயிர் செய்யலாம். மேலும் இதற்கான உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகளும் சொட்டு நீர் பாசனக் குழாய்கள் மூலமே செலுத்தப்படுவதால் செடிகளின் வேர்ப்பகுதியில் அவைகள் சென்று சேருகின்றன. இதனால் உரம் மற்றும் பூச்சி மருந்து செலவுகளும் குறைக் கப்படுகின்றன. மேலும் சொட்டு நீர் பாசனம் அமைக்க

தோட் டக்கலை துறை மூலம் 65 சதவீதம் மான்ய விலையில் பாசனக் கருவிகள் பெற்று விவசாயிகள் பயன் பெறலாம் என தெரிவித்தனர்.

**தொடர் மழை எதிரொலி: தக்காளி விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2010,02:17 IST

சேலம்: தொடர் மழை காரணமாக, சேலத்தில் தக்காளி விலை உயர்ந்துள்ளது. தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. மழை காரணமாக தக்காளி விளைச்சல் பாதிப்படைந்து, சேலத்துக்கு தக்காளி வரத்து பாதிக்கு மேல் குறைந்துள்ளது.சேலம் மாநகரில் பால்மார்கெட், வ.உ.சி.,மார்கெட், சின்னகடைவீதி மார்கெட், தாதகாபட்டி, சூரமங்கலம், அம்மாபேட்டை உழவர் சந்தை போன்ற இடங்களில் கடந்த புதன் கிழமை தக்காளி கிலோ 6 ரூபாய் விலைக்கு விற்பனை செய்யப்பட்டது. வரத்து குறைந்துள்ளதால் நேற்று விலை உயர்ந்து கிலோ 12 ரூபாய் முதல் 15 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது.

சேலம் மேட்டுத்தெரு வ.உ.சி., மார்கெட் காய்கறி மொத்த வியாபாரி சுப்பிரமணி கூறியதாவது: சேலத்தில் உள்ள மார்கெட் மற்றும் கடைகளுக்கு தர்மபுரி மாவட்டம் ராயக்கோட்டை, ஆத்தூர், மேச்சேரி ஆகிய பகுதிகளில் இருந்து அதிக அளவில் நாட்டு தக்காளிகள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. தினமும் 10 முதல் 14 லோடுகள் வரத்து உள்ளது. கடந்த மாதம் இப்பகுதிகளில் அபரிமிதமான தக்காளி விளைச்சலால், மார்க்கெட்டுகளில் நாட்டு தக்காளி 20 கிலோ கொண்ட பெட்டி (இரண்டாம் ரகம்) 150 ரூபாய்க்கும், முதல் ரகம் 190 ரூபாய் வரையிலும் ஏலம் போனது. சில்லரை விலையில் தக்காளி கிலோ 8 ரூபாய் முதல் அதிகபட்சமாக 10 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. நாட்டு தக்காளி விலை குறைவு காரணமாக, பெங்களூர் தக்காளியை வியாபாரிகள் யாரும் வாங்கவில்லை. தற்போது தொடர் மழை காரணமாக, தக்காளிகள் செடிகளில் காய்கள் வெடித்து அழுகிவிடுகிறது. அதனால் உற்பத்தி குறைந்து சேலத்துக்கு வரத்து குறைந்துள்ளது. வரத்து குறைவால் தக்காளி விலையில் கிலோவுக்கு 6 ரூபாய் வரை அதிகரித்துள்ளது. கடந்த வாரம் 8 ரூபாய்க்கு விற்ற இரண்டாம் தர தக்காளி விலை 15 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. தக்காளி விலை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

**துவரை சாகுபடி விளக்கத்திடல் பல்கலை பேராசிரியர்கள் ஆய்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 07,2010,04:02 IST

பள்ளிபாளையம்: துவரை சாகுபடி செயல் விளக்கத்திடலை, கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலை துறை பேராசிரியர்கள் ஆய்வு மேற்கொண்டனர். பள்ளிபாளையம் வட்டாரத்தில் பொதுவாக நெல், கரும்பு, மஞ்சள் போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. துவரை சாகுபடி மானாவாரி பகுதியில் மட்டும் குறைவான பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. துவரம் பருப்பு உற்பத்தியை பள்ளிபாளையம் வட்டாரத்தில் நடப்பு ஆண்டில் அதிகரித்திட தேசிய பயறு வகை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 15 இடங்களில் செயல் விளக்கத்திடல்கள் அமைக்கப்பட்டுள்ளது.

அத்திடல்களை கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலை பயறு துறை விஞ்ஞானிகள் முத்தையா, பழனிவேலன் ஆகியோர் நேரில் ஆய்வு செய்தனர். ஈகாட்டூரை சேர்ந்த விவசாயி சக்திவேல், எளந்தக்குட்டை கணேசன் ஆகியோர் தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள துவரை செயல் விளக்கத்திடல்களை வயல் ஆய்வு செய்தனர். ஆய்வின்போது பள்ளிபாளையம் வேளாண் உதவி இயக்குனர் முரளிதரன், வேளாண் அலுவலர் கவிதா, துணை வேளாண் அலுவலர்கள் ஞானபிரகாசம், மாயாஜோதி, அலுவலர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

**மேட்டூர் பூங்காவில் நடப்படும் கொரியன் புல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2010,02:17 IST

மேட்டூர்: மேட்டூர் அணை பூங்காவை அழகுபடுத்த ஆந்திராவில் இருந்து லாரி மூலம் கொரியன் புல் கொண்டு வரப்பட்டு, மேட்டூர் அணை பூங்காவில் நடவு செய்யப்படுகிறது. மேட்டூர் அணை அடிவாரத்தில் 33.20 ஏக்கர் நிலப்பரப்பில் லேடி பிடரிக் ஸ்டேன்லி பூங்கா அமைந்துள்ளது. பூங்கா மான் பண்ணை, பாம்பு பண்ணை, சிறுவர் விளையாட்டு திடல் உள்பட ஏராளமான பகுதிகள் அமைந்துள்ளது. மாநிலம் முழுவதும் இருந்து தினமும் பல ஆயிரம் சுற்றுலா பயணிகள் மேட்டூர் அணையை சுற்றி பார்த்து செல்கின்றனர். கடந்த சில மாதங்களாக சுற்றுலா துறை நிதி உதவி மூலம் பூங்காவை அழகுப்படுத்தும் பணி நடக்கிறது. அதன் ஒரு பகுதியாக பூங்காவின் உள்பகுதியில் மொத்தம் 5, 800 சதுர மீட்டர் பரப்பளவில் கொரியன்புல் நடவு பணி நடக்கிறது.

பூங்காவை அழகுபடுத்தும் கொரியன் புல் தமிழகம், கர்நாடகா, ஆந்திரா உள்பட பல்வேறு பகுதிகளில் விற்பனைக்காக தோட்டங்களில் வளர்க்கப்படுகிறது. அந்த புல்லை சதுர மீட்டர்

அடிப்படையில் வியாபாரிகள் விலைக்கு வாங்கி விற்பனை செய்கின்றனர். ஆந்திரா மாநிலம், காக்கிநாடாவில் இருந்து லாரிகளில் 5, 800 சதுர மீட்டர் கொரியன் புல் கொண்டு வரப்பட்டு தற்போது மேட்டூர் அணை பூங்காவில் நடவு செய்யப்படுகிறது.

**ராஜராஜன் நெல் சாகுபடி விழிப்புணர்வு முகாம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2010,03:12 IST

நாமக்கல்: வேளாண் துறை சார்பில், ராஜராஜன் 1,000 நெல் சாகுபடி குறித்த வழிப்புணர்வு முகாம், எருமப்பட்டி யூனியன் தேவராயபுரத்தில் நடந்தது. மாவட்ட வேளாண் இணை இயக்குனர் சிவராஜ் தலைமை வகித்தார். வட்டார வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜூ வரவேற்றார். வேளாண் துணை இயக்குனர் நடராஜன், உதவி இயக்குனர் துரைசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். முகாமில், ராஜராஜன் 1,000 நெல் சாகுபடி குறித்தும், நாற்றங்கால் தொழில் நுட்பம் மற்றும் மார்க்கர் கருவி கொண்டு நடவு முறை குறித்தும் விளக்கப்பட்டது. வயலில் செயல்முறை விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில், வட்டார வேளாண் அலுவலர் கவிதா, துணை வேளாண் அலுவலர் பசுபதி, உதவி வேளாண் அலுவலர்கள் ராமசாமி, சீனிவாசன், விவசாயிகள் உள்பட 100க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

**மஞ்சள் பயிரில் நோய் தாக்குதல் அதிகரிப்பு கட்டுப்படுத்த அதிகாரி அறிவுரை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 07,2010,03:35 IST

நாமக்கல்: "மஞ்சள் பயிரில் நோய் தாக்குதலை கட்டுப்படுத்த தடுப்பு முறைகளை கையாள வேண்டும்' என, நாமக்கல் உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் நடராஜன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: மஞ்சள் பயிரின் இலைகளில் உள்ள நுண்ணூட்ட சத்து குறைபாட்டை போக்க 25 லிட்டர் நீரில் 15 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரத்தை நன்கு கலந்து ஒரு நாள் இரவு முழுவதும் வைத்திருக்க வேண்டும். மறுநாள் இக்கரைசலில் இருந்து எடுக்கப்பட்ட தெளிந்த நீரில் 375 கிராம் யூரியா, 375 கிராம் துத்தநாக சல்பேட், 375 கிராம் போராக்ஸ் மற்றும் 375 கிராம் இரும்பு சல்பேட் ஆகியவற்றை கலக்கி பின் மொத்தம் 250 லிட்டர் வரும் அளவுக்கு நீர் சேர்த்து பயிர்களுக்கு தெளித்து வந்தால் நுண்ணூட்டச் சத்து பற்றாக்குறை நீங்கி பயிர் செழித்து வளரும். முதல் முறை தெளித்தது போல் 20-25 நாட்களில் மீண்டும் ஒரு முறை அதேபோல் கரைசல் தயார் செய்து பயிர்களுக்கு தெளிக்க வேண்டும்.

இலைப்புள்ளி நோய் தாக்கப்பட்ட இலையின் மேற்பரப்பில் சிறிய பழுப்பு நிறப்புள்ளிகள் தோன்றி அவை ஒன்றுடன் ஒன்று இணைந்து பெரிதாகி இலைகளை கருகச்செய்யும். பாதிக்கப்பட்ட இலைகளை சேகரித்து எரிக்க வேண்டும். அதன் தாக்குதலை குறைக்க 2 கிராம், ஒரு லிட்டர் என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். செதில் பூச்சிகள் கிழங்கின் சாறை உறிஞ்சி சேதம் விளைவிப்பதால் கிழங்கு சுருங்கி காய்ந்துவிடும். இலைகள் வெளுத்து காணப்படும். இப்பூச்சிகளை கட்டுப்படுத்த டை மீத்தோயேட் மருந்தை ஒரு லிட்டருக்கு 2 மி.லி., என்ற அளவில் கலந்து கிழங்கு நன்கு நனையும்படி மண்ணில் ஊற்ற வேண்டும். தண்டுத் துளைப்பான் நோயை கட்டுப்படுத்த தாக்கப்பட்ட செடியின் பாகத்தை புழுவுடன் சேர்ந்து அழித்துவிட வேண்டும். ஒரு லிட்டருக்கு 2 மி.லி., குளோர்பைரிபாஸ் கலந்து தெளிக்க வேண்டும்.

நூற்புழுக்கள் தாக்கிய பயிரில் விரலியோட்டம் தடைப்பட்டு ஆங்காங்கே வேர்பாகம் வீங்கி முடிச்சி போல் காணப்படும். வேர்களின் உட்பகுதியில் உட்சென்று இப்புழுக்கள் உண்ணுவதால் ஊட்டச்சத்துக்கள் தண்ணீர் உறிஞ்சுவது குறைந்து இலைகள் மஞ்சளாகி வாடிவிடும். அதை போக்க தொழு உரம், கம்போஸ்ட், வேப்பம் புண்ணாக்கு, கரும்பு ஆலை கழிவு இடலாம். ஊடு பயிராக செண்டு மல்லி சாகுபடி செய்யலாம். நூற்புழு தாக்கிய வயலில் கார்போபியூரான் குருணை மருந்து ஒரு ஏக்கருக்கு 12 கிலோ வீதம் நடவு செய்த மூன்று அல்லது ஐந்து மாதங்களில் பயிரை சுற்றி இட்டு நூற்புழுக்களை கட்டுப்படுத்தலாம். பயிர் சுழற்சி முறை கடைபிடிக்கலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**தென்னையை தாக்கும் கருத்தலைப்புழு கட்டுப்படுத்த வேளாண் துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 07,2010,04:29 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் தென்னையில் அதிக அளவில் கருத்தலைப்புழு தாக்குதலால், உற்பத்தி பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கருத்தலைப்புழு தாக்குதலை கட்டுப்படுத்த வேளாண் துறை அறிவுரை வழங்கியுள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் 6,000 ஹெக்டேரில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கு உற்பத்தியாகும் தேங்காய்கள் வெளி மாநிலங்களுக்கும் உள்ளூர் சந்தைக்கும் அதிக அளவில் விற்பனைக்கு செல்கிறது. பெரும் அளவில் இளநீருக்காக வெளி மாநிலங்களுக்கு தேங்காய் அறுவடை செய்யப்பட்டு விற்பனைக்கு செல்கிறது.

தர்மபுரி மாவட்டத்தில் பரவலாக தென்னைகளில் கருத்தலைப்புழு தாக்குதல் அதிகரித்துள்ளது. இந்த புழு தாக்குதல் காரணமாக தென்னை மட்டைகளில் பசுமை முழுவதும் உறிஞ்சப்பட்டு,

தென்னை மட்டைகள் காய்ந்து சருகாகி வருவதோடு, புதிய பாளைகளிலும் கருத்தலைப்புழு தாக்குதல் காரணமாக வளர்ச்சி அடையும் முன் சருகாகி வருகிறது. பாலக்கோடு தாலுகா பகுதிக்கு உட்பட்ட மாரண்டஹள்ளி, சந்திராபுரம், கெண்டனேஅள்ளி ஆகிய பகுதிகளில் அதிக அளவில் தென்னைகளில் கருத்தலைப்புழு தாக்குதல் கடந்த சில ஆண்டாய் இருந்து வருகிறது. புழு தாக்கம் காரணமாக தேங்காய் உற்பத்தி 20 முதல் 30 சதவீதம் குறைந்துள்ளது.

இது குறித்து வேளாண் அதிகாரிகள் கூறியதாவது: தென்னை மரத்தின் அனைத்து பகுதிகளும் பல்வேறு உபயோகத்துக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. தென்னை சார்ந்த சிறு தொழில் மூலம் பல விவசாய கூலி தொழிலாளர்களும், விவசாயம் சார்ந்த தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களும் பயன் அடைந்து வருகின்றனர். போதிய மழையின்மை காரணமாக தர்மபுரி மாவட்டத்தில் தென்னைகளில் கருத்தலைப்புழு தாக்குதல் அதிகரித்துள்ளது. இதை கட்டுப்படுத்த விவசாயிகள் உரிய தொழில் நுட்ப முறைகளை பின் பற்றி கருத்தலைப்புழுக்கள் தாக்கத்தில் இருந்து தென்னை மரங்களை பாதுகாக்க வேண்டும்.

புழுவை கட்டுப்படுத்த ஒட்டுண்ணிகள், பிரகானிட், பெத்திலிட், பூலோபிட்10:10:20 எண்கள் வீதம் மரத்துக்கு ஐந்து முறை 15 நாட்கள் இடைவெளி விட்டு கட்டுப்படுத்த வேண்டும். இளம் மரத்தில் புழுக்களின் சேதம் தெரிந்தால் "மாலத்தியான்' என்ற மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் ஒரு மில்லி என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். பென்சில் பருவமுடைய புதிய வெள்ளை நிறமுள்ள வேரை எடுத்து சாய்வாக வெட்ட வேண்டும். பின் 10 மில்லி மனோகுரோட்டோபாஸ், நுவக்ரான் 35 சதவீதத்தை 10 மில்லி தண்ணீரில் கலந்து சிறிய பாலித்தீன் பையை வேரில் கட்ட வேண்டும். வேர் மூலம் உறிஞ்சப்படும் மருந்து தென்னையை தாக்கும் கருத்தலைபுழுக்கள் பசுமையை ஊறிஞ்சும் போது, மருந்தின் தன்மை புழுக்களை தாக்கும். இவ்வாறு புழுக்கள் பாதிப்பை கட்டுப்படுத்தலாம்.

**விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 07,2010,04:27 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்ட உழவர் பயிற்சி நிலையம் மூலம் மொரப்பூர் ஒன்றியம் ஒடசல்பட்டி கிராமத்தில் வேளாண் துறை சார்பில் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது. வேளாண் துணை இயக்குனர் மேகநாதன் தலைமை வகித்தார். விவசாயிகள் பயிர் சாகுபடியில் சந்திக்கும் பிரச்னைகள் குறித்தும், அதற்குரிய தீர்வுகள் குறித்தும், தற்போதைய நீர் வளம் உள்ள பகுதிகளில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் ராஜராஜன் 1,000 நெல் சாகுபடி தொழில் நுட்ப பதினான்கு

நாள், வயதுடைய நாற்று, சதுர முறையில் 22.5க்கு22.5 செ.மீ., இடைவெளியில் பயிர் நடவு, நடவு செய்த 15 நாட்கள் கழித்து 10 நாட்கள் இடைவெளியில் கோனோகளைக்கருவி கொண்டு களை எடுத்து மண்ணில் காற்றோட்டத்தை ஏற்படுத்தி வேர் வளர்ச்சி, தூர் எண்ணிக்கை அதிகப்படுத்தி, மேலுரத்தை பிரித்தளித்து மகசூலை அதிகரித்தல் குறித்து விவசாயிகளுக்கு குறும்பட செயல்முறை விளக்கம் மூலம் விவசாயிகளின் அனுபவ பகிர்வு மூலம் விளக்கினர்.

மேலும் செம்மை கரும்பு சாகபடி தொழில் நுட்பங்கள், தானிய வகை பயிர்கள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பயிறு வகைப்பயிர்கள் பூஞ்சான மற்றும் உயிர் உர விதை நேர்த்தி முறைகள் பற்றியும் குறும்படம் மூலம் விளக்கப்பட்டது. உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் அமுதவள்ளி வேளாண் துறை திட்டங்கள் குறித்து பேசினார். 25 முன்னோடி விவசாயிகள் பங்கேற்றனர். ஏற்பாடுகளை ஒடசல்பட்டி உழவர் விவாதக்குழு அமைப்பாளர்கள் செய்திருந்தனர்.

**பட்டுக்கூடு விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 07,2010,03:50 IST

ஓசூர்: பண்டிகை காலங்களையொட்டி ஓசூரில் பட்டு கூடு விலை உயர்ந்து வருவதால் விவசாயிகள்  மகிழ்ச்சியடைந்துள்ளனர். தமிழகத்தில் கிருஷ்ணகிரி, ஈரோடு, தர்மபுரி, சேலம், நெல்லை, திண்டுக்கல் மற்றும் வேலூர் மாவட்டங்களில் அதிகளவு பட்டு உற்பத்தி செய்யப்படுகிறது. குறிப்பாக ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை தாலுகாவில் 5,000 விவசாயிகள் பட்டு உற்பத்தி தொழிலில் ஆண்டு முழுவதும் ஈடுபட்டு வருகின்றனர். ஓசூர் தாலுகாவில் விவசாயிகள் பட்டு உற்பத்தி குறி வைத்து 5,000 ஏக்கரில் மல்பரி சாகுபடி செய்துள்ளனர். விவசாயிகள் உற்பத்தி செய்யும் பட்டு கூடுகளை விற்பனை செய்வதற்காக, ஓசூர் மற்றும் தர்மபுரியில் பட்டு கூடு விற்பனை அங்காடிகள் செயல்படுகிறது. விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் பட்டு கூடுகளை தினம் இங்கு கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர்.

பொதுவாக பட்டு கூடு விற்பனையை பொறுத்தவரையில் பருவநிலைக்கு தகுந்தாற்போல் கூடு விலை இருக்கும். தற்போது தீபாவளியை தொடர்ந்து புத்தாண்டு மற்றும் கிறிஸ்துமஸ் பண்டிகைகளுக்காக தமிழகத்தில் பட்டு துணிகள் உற்பத்தி தீவிரமடைந்துள்ளதால் பட்டு கூடுகள் விலை உயர்ந்துள்ளது. கடந்த காலத்தில் வெண் பட்டு கூடுகள் கிலோ 200 ரூபாய் வரைக்கும், கலப்பின மஞ்சள் பட்டு கூடுகள் 150 ரூபாய் வரைக்கும் விற்பனை செய்யப்பட்டது. தற்போது ஓசூர் பட்டு கூடு விற்பனை அங்காடியில் ஒரு கிலோ வெள்ளை பட்டு கூடுகள் கிலோ 300 ரூபாய்க்கும், கலப்பின மஞ்சள் பட்டு கூடுகள் 240 ரூபாய்க்கும் விற்பனையாகிறது.

பட்டு கூடுகள் விலை அதிகமாக வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஓசூர் பட்டுவளர்ச்சி துறை ஆய்வாளர் கூறியதாவது: இந்தியாவை பொறுத்தவரையில் பட்டு உற்பத்தி குறைவாக உள்ளது. ஆண்டுக்கு 28,000 டன் பட்டு தேவைப்படுவதால் தமிழகத்தில் பட்டு கூடுகளுக்கு தற்போது வரவேற்பு ஏற்பட்டுள்ளது. பட்டு கூடுகளுக்கு நிலவும் வரவேற்பு தகுந்தவாறு, பட்டு நூற்பாலைகள் போதிய அளவு இல்லை. அதனால் பட்டு நூற்பாலை உரிமையாளர்கள் நிர்ணயிக்கும் விலைக்கு விவசாயிகள் பட்டு கூடுகளை விற்பனை செய்ய வேண்டிய நிலை உள்ளது. கர்நாடகாவில் அதிகளவு பட்டு நூற்பாலைகள் உள்ளது. அங்கு தமிழகத்தை ஒப்பிடும்போது பட்டு கூடுகள் விலை எப்போதும் அதிகமாக இருக்கும். அதனால், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பட்டு கூடுகளை உற்பத்தி செய்யும் விவசாயிகள் பெரும்பாலும் கர்நாடகாவுக்கு கொண்டு சென்று விற்பனை செய்கின்றனர்.

இதனால், தமிழக பட்டு வளர்ச்சி துறை மானிய உதவிகளை பெற்று உற்பத்தி செய்யும் பட்டு கூடுகள் கர்நாடகாவுக்கு சென்று அம்மாநிலத்தின் உற்பத்தி மதிப்பு கூடுகிறது. தற்போது ஓசூரில் மாதந்தோறும் 30,000கிலோ பட்டு கூடுகளை விவசாயிகள் விற்பனை அங்காடிக்கு கொண்டு வருகின்றனர். கர்நாடகாவுக்கு செல்லும் பட்டு கூடுகளையும் சேர்க்கும்பட்சத்தில் 50 ஆயிரம் கிலோவை தாண்டும். ஓசூர் பகுதியில் பட்டு நூற்பாலைகளை அரசு அதிகம் நிறுவும் பட்சத்தில் பட்டு உற்பத்தி மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**மழையால் மார்க்கெட்டுக்கு மீன் வரத்து குறைவு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2010,02:27 IST

ஈரோடு: வடகிழக்கு பருவமழை துவங்கியதால், கடலோர மாவட்டங்களிலிருந்து கிடைக்கும் கடல் மீன் ரகம் வரத்து குறைந்து, 30 சதவீதம் விலை அதிகரித்துள்ளது. ஈரோட்டில் ஸ்டோனி பிரிட்ஜ், காவிரி ரோடு, மரப்பாலம் ஆகிய இடங்களில் உள்ள மீன் மார்க்கெட்டில் 50க்கும் மேற்பட்ட கடைகள் செயல்படுகின்றன. கடல் மீன்கள் தமிழகத்தின் கடலோர மாவட்டங்கள், வெளி மாநிலங்களிலிருந்தும், அணை மீன்கள் பவானிசாகர், மேட்டூர் ஆகிய இடங்களில் இருந்தும், கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களிலிருந்து பண்ணை மீன்களும் கொண்டு வரப்படுகின்றன. ஈரோடு மீன் மார்க்கெட்டில் இருந்து பவானி, பெருந்துறை, குமாரபாளையம், கொடுமுடி, காங்கேயம், திருப்பூர் ஆகிய நகரங்களை சேர்ந்த சில்லரை வியாபாரிகளும், பொதுமக்களும் மீன் வாங்கி செல்கின்றனர். சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பல லட்சம் ரூபாய்க்கு மேல் மீன் விற்பனையாகும்.

வடகிழக்கு பருவமழை துவங்கியுள்ள நிலையில், கடலோர மாவட்டங்களில் மீன்பிடிப்பு குறைந்து வருகிறது. இதனால், ஈரோடு மீன் மார்க்கெட்டுக்கு கடல்மீன் ரகங்களின் வரத்து குறைந்துள்ளது. கடல் மீன்கள் வரத்து குறைந்து போனதால், மீன் விலை 30 சதவீதம் அதிகரித்துள்ளது. மீன் விலை அதிகரித்துள்ள நிலையிலும், கடல் மீன் பிரியர்கள் கடையை முற்றுகையிட்டு வேண்டிய அளவு மீனை வாங்கி செல்கின்றனர். இந்த வாரம் கடல் மீன் ரகங்களான வஞ்சிரம் கிலோ 280 ரூபாய், சீலா 180, பாறை 180, வில 170, வாவல் 270, இறால் 250லிருந்து 300, அயிலை 100, மத்தி 50 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகின்றன. அணை மீன் ரகங்களான லோகு, கட்லா, மிருகால் தலா 90 ரூபாய்க்கும், ஜிலேபி 70, கண் நண்டு 140 ரூபாய்க்கும் விற்பனையாகின்றன.

**தஞ்சை மாவட்டத்தில் சம்பா, தாளடியில் 93,000 ஹெக்டேர் நடவுப்பணி நிறைவு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2010,02:34 IST

தஞ்சாவூர்: தஞ்சை மாவட்டத்தில் நடப்பு சம்பா, தாளடியில் 93 ஆயிரத்து 408 ஹெக்டேரில் நடவுப்பணிகள் நிறைவு பெற்றுள்ளது. தஞ்சை மாவட்டத்தில் கடந்த குறுவை பருவத்தில் 20 ஆயிரத்து 852 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டது. இதில், 11 ஆயிரத்து 462 ஹெக்டேரில் ராஜராஜன் 1000 முறை சாகுபடி முறை பின்பற்றப்பட்டது. குறு வை சாகுபடியில் இதுவரை 20 ஆயிரத்து 161 ஹெக்டேரில் அறுவடை பணி முடிந்துள்ளது. குறுவையில் அதிகப்பட்சமாக ஒரு ஹெக்டேருக்கு பத்தாயிரத்து 600 கிலோ மகசூல் கிடைத்துள்ளது. இந்த மகசூல் ராஜராஜன் 100 முறை சாகுபடியை பின்பற்றியதில் பெறப்பட்டுள்ளது.

குறுவை சாகுபடியில் சராசரியாக ஒரு ஹெக்டேருக்கு 6,200 கிலோ மகசூல் பெறப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் சம்பா பருவத்தில் 1.05 லட்சம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 82 ஆயிரத்து 916 ஹெக்டேரில் நடவுப்பணி முடிந்துள்ளது. குறுவை நெல் அறுவடை செய்யப்பட்ட இடத்தில் தாளடி பட்டத்தில் இதுவØ ர பத்தாயிரத்து 492 ஹெக்டேரில் நடவுப்பணி முடிந்து மொத்தம் 93 ஆயிரத்து 408 ஹெக்டேரில் நடவுப்பணி நிறைவு பெற்றுள்ளது. சம்பா மற்றும் தாளடி பருவத்தில் ராஜராஜன் 1000 முறை சாகுபடியில் 47 ஆயிரத்து 389 ஹெக்டேரில் பயிர் செய்யப்பட்டுள்ளது. தற்போது வடக்கிழக்கு பருவமழை துவங்கியதாலும், மேட்டூர் அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளதாலும் எஞ்சிய சம்பா, தாளடி பரப்பில் நவம்பர் இறுதிக்குள் நடவுப்பணி நிறைவு பெறும்.

குறுகிய கால பயிர் கடன் ஏப்ரல் ஒன்று முதல் அக்டோபர் 30ம் தேதி வரை தஞ்சை மற்றும் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் 25 ஆயிரதது 910 பேருக்கு 74 கோடியே 86 லட்சத்து 93 ஆயிரம் கடனுதவியும், வேளாண் நகைக்கடன் 8,734 பேருக்கு 33 கோடியே ஒன்பது

லட்சத்து பத்தாயிரத்துக்கும் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் நடப்பாண்டு 776 கோடி வேளாண் கடன் வழங்க இலக்கு நிர்ணயித்து இதுவரை 420 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. நவம்பர் மூன்றாம் தேதி வரை தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கம் மூலம் யூரியா 12 ஆயிரத்து நான்கு டன், டி.ஏ.பி., பத்தாயிரத்து 917 டன், பொட்டாஷ் 5,383 டன் விற்பனை செய்யப்பட்டுள்ளது. தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கம், மண்டல அலுவலக கிட்டங்கியில் யூரியா 5,452 டன், டி.ஏ.பி., 5,090 டன், பொட்டாஷ் 2,523 டன் இருப்பு உள்ளது.

தஞ்சை மாவட்டத்தில் 118 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்படுகிறது. இக்கொள்முதல் நிலையம் மூலம் ஜூலை ஒன்று முதல் நவம்பர் நான்காம் தேதி வரை 48 கோடி ரூபாய் மதிப்பில் 43 ஆயிரத்து 852 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தமிழக அரசு ஏற்கனவே அறிவித்தபடி கிரே டு "ஏ' நெல் குவிண்டால் 1,100 ரூபாய்க்கும், பொதுரக நெல் குவிண்டால் 1,050 ரூபாய்க்கும் கொள்முதல் செய்கிறது.

**ஈரோடு மாவட்டத்துக்கு ரூ. 3,260 கோடி கடன் விவசாயத்துக்கு மட்டும் ரூ. 1,456 கோடி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 07,2010,03:56 IST

ஈரோடு: ஈரோடு மாவட்டத்துக்கான 2011-12ம் நிதியாண்டுக்கு நபார்டு வங்கியால் தயாரிக்கப்பட்ட வளம் சார்ந்த வங்கி கடன் 3,260 ரூபாய் கோடி மதிப்பிடப்பட்டுள்ளது. நபார்டு வங்கியின் வளம் சார்ந்த கடன் திட்ட அறிக்கை வெளியிடுவது குறித்த கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. ஈரோடு மாவட்டத்துக்கான 2011-12 ம் நிதியாண்டுக்கு நபார்டு வங்கியால் தயாரிக்கப்பட்ட வளர் சார்ந்த வங்கி கடன் திட்ட அறிக்கையை கலெக்டர் சவுண்டையா வெளியிட்டார். திட்ட முதல் பிரதியை, மாவட்ட முன்னோடி அதிகாரி கோபால் பெற்றுக்கொண்டார்.

திட்ட அறிக்கையின்படி மாவட்டத்தில் 3,260 கோடி ரூபாய் வரை கடன் கொடுக்க வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த கடனுதவி திட்டமானது ஈரோடு மாவட்டத்தின் உள்கட்டமைப்பு, எதிர்கால வளர்ச்சி திட்டங்கள், அரசின் பல்வேறு கொள்கை முடிவுகள், நிதி நிறுவனங்களின் செயலாக்கம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு மாவட்ட மண்டல மற்றும் மாநில அளவிலான வங்கிகள் தமிழக அரசின் பல்வேறு அரசு துறைகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஆகியோரின் ஆலோசனைப்படி தயாரிக்கப்பட்டுள்ளது.

நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் சந்தானம் திட்டம் குறித்து விளக்கி பேசியதாவது: வரும் 2011-12ம் ஆண்டுக்கான மொத்த கடனுதவி திட்டமான 3,260 கோடி ரூபாயில் விவசாயத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து 1,456 கோடி ரூபாய் (44.6 சதவீதம்) ஒதுக்கப்பட்டுள்ளது. பயிர் கடனுக்கு மட்டும் 1,114 கோடி ரூபாய், தொழில் துறைக்கு 1,076 கோடி ரூபாய், இதர முன்னுரிமை கடன்களான கல்வி கடன், வீட்டு கடன் போன்றவதுக்கு 727 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

நடப்பு 2010-11 நிதியாண்டைக் காட்டிலும் 2011-12 நிதியாண்டில் ஈரோடு மாவட்டத்துக்கு 9.7 சதவீதம் கூடுதலாக கடன் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அனைத்து விவசாயப் பெருமக்களும் வங்கிகள் மூலம் விவசாய கடன் அட்டை மூலம் வழங்கவும், விதைப் பண்ணைகள், சிறுநீர் பாசன திட்டங்கள், ஆடு, மாடு, பால் உற்பத்தி மற்றும் விநியோகத்தை பலப்படுத்தவும், தோட்டக்கலைப் பயிர்கள் போன்றவற்றுக்கு முன்னுரிமை வழங்கவும் திட்டம் வலியுறுத்தி இருக்கிறது. ஈரோடு மாவட்டத்தின் வளர்ச்சி பணிகளுக்கு உதவும் வகையில் நபார்டு வங்கி இதுவரை 1,200 பல்வேறு ஊரக கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதி உதவி அளித்துள்ளது. இதன் மூலம் அளிக்கப்பட்ட மொத்த நிதி 300 கோடி ரூபாய்.
இவ்வாறு அவர் பேசினார். கூட்டத்தில் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் முனிராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**அதிக மகசூல் பெற மண் பரிசோதனை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 07,2010,03:54 IST

ஈரோடு: வேளாண்துறை சார்பில் பவானியில் கிராம ஏற்புத்திட்டம் துவக்க விழா நடந்தது. பவானி தாலுகா பெரிச்சிபாளையம் கிராமம் மண் பரிசோதனை விழிப்புணர்வுக்கான கிராம ஏற்பு திட்ட கிராமமாக ஈரோடு மண் பரிசோதனை நிலையத்தால் தேர்வு செய்யப்பட்டு, அதற்கான விழா 2ம்தேதி நடந்தது. பவானி உதவி வேளாண் அலுவலர் ஜான்ஜோஸப் வரவேற்றார். ஈரோடு மண் பரிசோதனை வேளாண் அலுவலர் முருகேசன் பேசுகையில், ""பயிர் விளைச்சலில் அதிக மகசூல் பெற மண் பரிசோதனை மிகவும் அவசியம், மண் பரிசோதனை அடிப்படையில் பயிர்களுக்கு தேவையான உரங்களை சிக்கனமாகவும், சமச்சீராகவும் பயன்படுத்த வேண்டும்.

""மண் பரிசோதனையுடன் நீர் பரிசோதனையும் செய்வது அவசியம். கிராம ஏற்பு திட்டத்தின் கீழ் இப்பகுதியில் மண் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் அடிப்படையில் உரமிடுதல் மிகவும் நல்லது,'' என்றார். விவசாயிகளுக்கு மண்வள அட்டைகளை, மண் பரிசோதனை நிலைய

வேளாண் அலுவலர் சசிகலா வழங்கினார். பெரிச்சிபாளையம் வரதநல்லூர், மேட்டுப்பாளையம் பகுதி விவசாயிகள் பங்கேற்றனர்.

**பருத்தி நூலுக்கு தட்டுப்பாடு இல்லை; விலை மட்டுமே சிக்கல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 07,2010,04:12 IST

கோவை:"இந்திய அளவுக்கு நூல் தட்டுப்பாடு இல்லை; போதுமான அளவு நூல் உற்பத்தியாகிறது;விலை உயர்வு மட்டுமே பிரச்னை' என, தென்னிந்திய மில்கள் சங்கம் (சைமா) தெரிவித்துள்ளது.திருப்பூர் பனியன் உற்பத்தியாளர்கள், நூல் ஏற்றுமதிக்கு தடை விதிக்க வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். நூலுக்கு இந்திய அளவில் தட்டுப்பாடு இல்லை. ஆயத்த ஆடை உற்பத்தியாளர்களுக்கு தேவையான அளவு நூல் கையிருப்பில் உள்ளது; விலை உயர்வு மட்டுமே பிரச்னையாக நீடித்து வருகிறது. அரசின் தவறான கொள்கையால், பருத்தி விலை தாறுமாறாக உயர்ந்துள்ளது. எனவே, பருத்தி விலையை கட்டுப்படுத்தி விலை உயர்வை தவிர்க்கலாம் என சைமா தெரிவித்துள்ளது.தென்னிந்திய மில்கள் சங்கத்தின் (சைமா) தலைவர் துளசிதரன் கூறியதாவது:பருத்தி விலை தாறுமாறாக உயர்ந்து வருகிறது.

சிலமாதங்களில் மட்டுமே சங்கர் -6 ரக பருத்தி, ஒரு கண்டி ஒன்றுக்கு ரூ.30 ஆயிரத்தில் இருந்து 45 ஆயிரம் ரூபாயாக உயர்ந்துள்ளது. அதாவது, 50 சதவீதம் உயர்ந்துள்ளது. ஆனால், ஒசைரி நூல் விலை கிலோ ஒன்றுக்கு, ரூ.185லிருந்து 213 ரூபாயாக மட்டுமே உயர்ந்துள்ளது. கடந்த 2005-06ம் ஆண்டு 25.21 கோடி கிலோவாக இருந்த பருத்தி,வரும் ஆண்டில், 33.70 கோடி கிலோவாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஜவுளி மேம்பாட்டு நிதியுதவியால், நூல் உற்பத்தி கணிசமாக உயர்ந்துள்ளது. ஜவுளி மேம்பாட்டு நிதியால், ஸ்பின்னிங் மில்கள், நவீனமயாக்கப்பட்டுள்ளன. இந்த மில்கள் அனைத்தும் தரமான நூலை உற்பத்தி செய்து தருவதால், ஆயத்த ஆடைகளின் தரமும் ஏற்றுமதியும் கணிசமாக உயர்ந்துள்ளது. ஆனால், பருத்தி நூலின் ஏற்றுமதி பெரியதாக உயரவில்லை. 2005-06ம் ஆண்டிலிருந்து, இதுவரை உற்பத்தியில் 20 சதவீதமே ஏற்றுமதியாகிறது. 80 சதவீதம் உள்நாட்டு தேவைக்கே மில்கள் அளித்து வருகின்றன.அதேசமயம், கடந்த ஆகஸ்ட் மாதத்தில் இருந்து மட்டும் ஒசைரி நூல் நுகர்வு 7.48 கோடி கிலோவிலிருந்து, 82.3 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது.

கோன் உற்பத்தியும் 6.65 கோடி கிலோவிலிருந்து 8.02 கோடியாகஉயர்ந்துள்ளது. 20 எஸ், 40 எஸ் கவுன்ட்களின் உற்பத்தி 67 சதவீதத்திலிருந்து 69 சதவீதமாக உயர்ந்துள்ளது. கடந்த ஆறு ஆண்டுகளில் மட்டும் இந்த கவுன்ட் நூல் உற்பத்தி 72.7 கோடி கிலோவிலிருந்து, 101 கோடி

கிலோவாக உயர்ந்துள்ளது. பருத்தி நூலின் அளவும் 38 சதவீதம் உயர்ந்துள்ளது. "நூல் இல்லை; பற்றாக்குறை' என, எந்த ஆயத்த ஆடை உற்பத்தியாளரும், நெசவாளரும் கூறியதே இல்லை. தேவைக்கும் அதிகமாகவே உள்ளது. ஆனால், ஆயத்த ஆடை உற்பத்தியாளர்கள், பல்வேறு மூலப்பொருள், உற்பத்தி செலவு உயர்வை, நூல் விலையில் சரிகட்ட நினைக்கின்றனர். புராசசிங், ஆள் கூலி, அந்நியச்செலாவணியில் ஏற்படும் மாற்றம் போன்றவற்றை சமாளிக்க இயலவில்லை. நூல் விலை உயர்வை ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

திருப்பூர், ஈரோடு, கரூர் போன்ற இடங்களில், மதிப்புக்கூட்டப்பட்ட ஜவுளி பொருள்களின் ஏற்றுமதி கணிசமாக உயர்ந்துள்ளது. இப்பகுதியில் ஜவுளி ஏற்றுமதிக்கு உதவும் மில்களுக்கு உதவ வேண்டிய கடமை ஏற்றுமதியாளர்களுக்கு உண்டு. அதேசமயம், இந்த உற்பத்தியாளர்கள், நூல் இறக்குமதி மேற்கொள்ள, அரசிடம் சுங்க வரியை தளர்த்துமாறு கோரலாம்; இவர்களுக்கு சர்வதேச அளவில் போட்டியிட அரசு அளிக்கும் "டூட்டி டிராபேக்' எளிதாக கிடைக்கும். வீழ்ச்சியடையும் நிலை ஆயத்த ஆடைகளுக்கு ஏற்படுமானால், தானியங்கி முறைக்கும், புதிய தொழில்நுட்பத்துக்கும் மாறலாம். இது, நீண்ட கால அடிப்படையில் பலனளிக்கும். பருத்தி விலையின் பெரும் உயர்வையடுத்து, சர்வதேச அளவில் ஆயத்த ஆடை விலையை 10 சதவீதம் வரை உயர்த்திக் கொள்ள சர்வதேச அளவில் உள்ள சில்லறை விற்பனையாளர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். எனவே, நூல் விலை உயர்வை ஏற்றுமதி செய்யும் ஜவுளி உற்பத்தியாளர்கள் ஏற்றுக் கொள்வதில் எவ்வித சிக்கலும் இல்லை. பருத்தி ஏற்றுமதியை மத்திய அரசு ஜனவரி 2011 வரை தள்ளி வைக்கலாம். செயற்கை இழை இறக்குமதி வரியை அரசு முற்றிலும் தளர்த்தலாம். பருத்தி நூல் இழை ஏற்றுமதியை தடைசெய்வதால், ஸ்பின்னிங் மில்கள் பெருமளவில் பாதிக்கப்படும். குறிப்பாக, ஏற்றுமதி மேம்பாட்டு சலுகை, அட்வான்ஸ் லைசென்ஸ் பாதிக்கப்படும். எதிர்காலத்தில், சீனா, பாகிஸ்தான், பங்களதேஷ், தாய்லாந்து போன்ற நாடுகளுக்கு நூல் ஏற்றுமதி முற்றிலும் பாதிக்கப்படும்.எனவே, நூல் ஏற்றுமதிக்கு தடை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை கைவிட்டு, பருத்தி விலையை குறைக்கவும், ஏற்றுமதியை ஒத்திவைக்கவும் ஆயத்த ஆடை அமைப்புகள் முன்வர வேண்டும். போர்க்கால அடிப்படையில், "தேசிய இழைக் கொள்கை'யை வரையறுத்து, அமல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு, துளசிதரன் தெரிவித்துள்ளார்.

**கொப்பரைக்கு கிராக்கி இருந்தாலும் விலை உயரவில்லை!**

பதிவு செய்த நாள் : நவம்பர் 07,2010,04:16 IST

பொள்ளாச்சி:தீபாவளி பண்டிகை விடுமுறையால் வெளிமார்க்கெட்டிற்கு கொப்பரை வரத்து குறைந்து, கொப்பரைக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது.காங்கேயம் மார்க்கெட்டில் கடந்த 30ம் தேதி நிலவரப்படி, கொப்பரை கிலோவுக்கு 48.75 ரூபாயும், தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு 1,035 ரூபாயும், தேங்காய் பவுடர் கிலோவுக்கு 70 ரூபாயும் விலை கிடைத்தது. தோப்புகளில் விவசாயிகள் பறித்து உரித்து வைத்துள்ள தேங்காய் டன்னுக்கு 13,750 ரூபாய் (பச்சை தேங்காய்), 15,500 ரூபாய் (காய்ந்த தேங்காய்) விலை கிடைத்தது.விவசாயிகள் பறித்து இருப்பு வைத்துள்ள தேங்காய் ஒன்றுக்கு 8 ரூபாய் முதல் 9 ரூபாய் வரையிலும், வியாபாரிகள் சொந்த பொறுப்பில் பறித்துக்கொள்வதற்கு ஒரு தேங்காய்க்கு 7.50 ரூபாய் முதல் 8 ரூபாய் வரை விலை கொடுக்கப்பட்டது.

காங்கேயம் மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி, கொப்பரை கிலோவுக்கு 49 ரூபாய் விலை கிடைத்தது. தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு 1,030 ரூபாயும், தேங்காய் பவுடர் ஒரு கிலோவுக்கு 70 ரூபாயும் விலை கிடைத்தது. பறித்து உரிக்கப்பட்ட தேங்காய் டன்னுக்கு 13,750 (பச்சை தேங்காய்), 15,500 (காய்ந்த தேங்காய்) விலை நிர்ணயம் செய்யப்பட்டது. இதனால் தென்னந்தோப்புகளில் தேங்காய்க்கு கடந்த வாரம் இருந்த விலையே கொடுக்கப்பட்டது.கொப்பரை உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் கூறியதாவது:வெளிமார்க்கெட்டில் கொப்பரைக்கு தட்டுப்பாடு உள்ளதால் தனியார் எண்ணெய் நிறுவனங்கள் கிலோவுக்கு 51 ரூபாய் வரையிலும் விலை கொடுக்கின்றனர். ஆனால் இடைத்தரகர்கள் வெளிமார்க்கெட்டில் கொப்பரை விலையை உயரவிடாமல் லாபம் பார்க்கின்றனர். இந்த நிலையை மாற்ற எண்ணெய் நிறுவனங்கள் நேரடி கொள்முதலில் ஈடுபட வேண்டும். இவ்வாறு, அவர்கள் தெரிவித்தனர்.

**வேளாண் பல்கலையில் வயல்வெளி கூட்டம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 07,2010,21:04 IST

கோவை : கோவை வேளாண் பல்கலையில் விவசாயிகளுக்கான குறுதானிய வயல்வெளி கூட்டம் நடந்தது.

பல்கலை சிறுதானியத்துறை தலைவர் வீரபத்திரன் வரேவற்று பேசுகையில்""கேழ்வரகு, சாமை, வரகு, குதிரைவாலி, தினை மற்றும் பனிவாகு உள்ளிட்ட ஆறுவகை குறுதானியங்களும் வறண்ட பூமி, சிறு வயல்கள் மற்றும் மலைப் பிரதேசங்களில் மானாவாரியில் விளையக்கூடிய முக்கிய பயிர்கள். விவசாயிகள் பருவ மழைக்கேற்ற வயதுடைய உயர்விளைச்சல் ரகங்களை தேர்வு செய்ய வேண்டும்," என்றார்.

பயிர் இனப் பெருக்கம் மற்றும் மரபியல் மையத்தின் இயக்குனர் தியாகராஜன் தலைமை வகித்து பேசுகையில், ""குறுதானிய விவசாயத்தில் அதிக நன்மை பெற, நல்ல தரமான உயர் விளைச்சல் ரக வித்துகளையும் விதைக்க, களையெடுக்க மற்றும் அறுக்க ஏதுவான இயந்திரங்களையும் பயன்படுத்த வேண்டியது அவசியம்," என்றார்.

கூட்டத்தில், குறுதானிய விவசாயிகள் பங்கேற்று பல்வேறு வகையான குறுதானிய உயர் விளைச்சல் ரகங்களையும், வளர்ப்புகளையும் பார்வையிட்டு பிடித்த ரகங்களை தேர்வு செய்தனர்.

**தொடர் மழையால் ததும்புகிறது ஆழியாறு அணை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 07,2010,04:18 IST

பொள்ளாச்சி:மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்யும் தொடர்மழையால் ஆழியாறு அணையின் நீர் மட்டம் முழுமையாக நிரம்பி, தண்ணீர் ததும்புகிறது.மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் வடகிழக்கு பருவமழை தொடர்ந்து பெய்வதால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.சோலையாறு அணையின் 160 அடி உயரத்தில் 152.02 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 685 கனஅடி தண்ணீர் வரத்துள்ளது. அணையில் இருந்து விநாடிக்கு 202 கனஅடி தண்ணீர் வெளியேறுகிறது. பரம்பிக்குளம் அணையின் 72 அடி உயரத்தில் 59.06 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 773 கனஅடி தண்ணீர் வரத்தாக உள்ளது. அணையில் இருந்து தூணக்கடவு டனல் வழியாக 1,022 கனஅடி தண்ணீர் வெளியேறுகிறது.ஆழியாறு அணையின் 120 அடி உயரத்தில் 119.50 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 270 கனஅடி தண்ணீர் வரத்தாக உள்ளது. ஆழியாறு அணை நிரம்பிய நிலையில் உள்ளதால் அணையில் இருந்து 432 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. திருமூர்த்தி அணையின் 60 அடி உயரத்தில் 29.72 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 761 கனஅடி தண்ணீர் வரத்துள்ளது.

அணையில் இருந்து 1,104 கனஅடி தண்ணீர் பாசனத்திற்கு திறந்து விடப்பட்டுள்ளது. அமராவதி அணையின் 90 அடி உயரத்தில் 56.40 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 1,187

கனஅடி தண்ணீர் வரத்தாக உள்ளது.நேற்று காலை 8.00 மணி வரை இரண்டு நாட்களில் பதிவான மழையளவு நிலவரம் (அளவுகள் மில்லி மீட்டரில்) வருமாறு: சோலையாறு-31, பரம்பிக்குளம்-9, ஆழியாறு - 14.6, திருமூர்த்தி - 7.5. அமராவதி- 36, மேல்நீராறு- 58, கீழ்நீராறு- 108, வால்பாறை- 52, சர்க்கார்பதி-2, மணக்கடவு- 5.5, பொள்ளாச்சி- 17, நெகமம்- 18, பொங்கலூர்- 37, பல்லடம்- 25, ருத்ராவதி- 65, கள்ளிப்பாளையம்- 14, நல்லாறு- 18, மேல்ஆழியாறு- 5, உப்பாறு- 90, தூணக்கடவு- 17, பெருவாரிப் பள்ளம்- 22, காடம்பாறை- 2, நவமலை- 3.2.

**தாமரைக்குளத்துக்கு தண்ணீர் வரத்து : அவிநாசி வட்டார விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 07,2010,22:28 IST

அவிநாசி : அவிநாசியில் உள்ள தாமரைக் குளத்தில் தண்ணீர் தேங்கி வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

அவிநாசிலிங்கேஸ்வரர் கோவிலுக்கு தென்புறம், அவிநாசி - மங்கலம் ரோட்டில், தாமரைக் குளம் உள்ளது. 75 ஏக்கருக்கும் மேற்பட்ட இக்குளத்தில் தண்ணீர் தேங்கி பல ஆண்டுகளாகிறது. கடந்த 4ம் தேதி இரவு 8.00 மணி முதல் நள்ளிரவு வரை அவிநாசி வட்டாரத்தில் கனமழை (139 மில்லி மீட்டர்) பெய்தது. இம்மழை காரணமாக அவிநாசி வட்டாரத்தில் வடக்கு பகுதிகளில் உள்ள சிறிய, பெரிய குட்டைகள் நிரம்பியுள்ளன.

இதையடுத்து தாமரைக் குளத்துக்கு நீர் வரத்து இருந்தது. குளத்திலுள்ள வெட்டுக்குழிகள் முழுவதும் நிரம்பி, தண்ணீர் மட்டம் உயர்ந்துள்ளது. குளப் பரப்பில் நடப்பட்ட கருவேலம் மரங்கள் மூழ்கும் நிலையில் உள்ளன. தொடர்ந்து மழை பெய்தால் மட்டுமே குளத்துக்கு தண்ணீர் வரத்து இருக்கும்.

மங்கலம் ரோடு பகுதி விவசாயிகள் கூறியதாவது: தாமரைக்குளத்தில் மூன்றாண் டுக்கு முன் சிறிது தண்ணீர் இருந்தது. அதற்கு 15 ஆண்டுக்கு முன் அரைக்குளம் நிரம்பியிருந்தது. அதைத்தொடர்ந்து தற்போது பெய்த நல்ல மழை காரணமாக, தாமரைக்குளத்துக்கு தண்ணீர் வந்துள்ளது. இதன் மூலம் சுற்றுப்புற பகுதிகளில் உள்ள விவசாய கிணறுகளில் நிலத்தடி நீர் மட்டம் கண்டிப்பாக உயரும். தொடர்ந்து மழை பெய்யும் என்று நம்புகிறோம், என்றனர்.

அவிநாசியில் உள்ள மற்றொரு குளமான சங்கமாங்குளத்துக்கும் சிறிதளவு தண்ணீர் வந்துள்ளது. சேவூர் வட்டாரத்தில் பல சிறிய, பெரிய குட்டைகள் தற்போதைய மழை காரணமாக நிரம்பியுள்ளது. ஒட்டுமொத்தமாக அவிநாசி வட்டாரத்தில் கடந்த சில தினங்களாக பெய்த மழை, விவசாயிகளின் மனங்களை குளிர்வித்துள்ளது.

**தென்னை நார் பொருட்கள் தொழில் மேம்பட ஏற்றுமதி மையம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 07,2010,04:01 IST

உடுமலை:தென்னை நாரில் இருந்து உற்பத்தி செய்யப்படும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் மேம்பட, நார் உற்பத்தி பொருட்களுக்கான ஏற்றுமதி மையம் உடுமலையில் அமைக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.மாநிலத்தில் தென்னை சாகுபடி பரப்பில் இரண்டாம் இடத்தை திருப்பூர் மாவட்டம் பெற்றுள்ளது. உடுமலை வட்டாரத்தில் 34 ஆயிரம் ஏக்கர், குடிமங்கலம் வட்டாரத்தில் 26 ஆயிரம் ஏக்கர், மடத்துக்குளத்தில் 7,500 ஏக்கரும் தென்னை விவசாயம் செய்யப்படுகிறது. மாவட்டத்தின் பிற பகுதிகளையும் சேர்த்து மொத்தம் 65 லட்சம் தென்னை மரங்கள் உள்ளன.ஆண்டுதோறும் தென்னை சாகுபடி பரப்பு உயர்ந்து கொண்டே வருகிறது.

தென்னை சாகுபடியாளர்கள் தேங்காய் விற்பனையை மட்டும் சார்ந்திருக்காமல் மதிப்பு கூட்டப்பட்ட பொருளாக தென்னை மரத்தில் இருந்து கிடைக்கும் பொருட்களை மாற்றுவதில் ஆர்வம் காட்ட துவங்கினர்.இதன் அடிப்படையில், முதல் கட்டமாக பொள்ளாச்சி மற்றும் உடுமலை பகுதியில் தேங்காய் மட்டைகளிலிருந்து நார் பிரித்தெடுக்கும் தொழிற்சாலைகள் உருவாகின. மட்டைகளிலிருந்து பெறப்படும் நார் சிறிய இயந்திரங்களால் கயிறாக திரிக்கப்பட்டு, உள்நாட்டு பயன்பாட்டுக் கான விற்பனைக்கு அனுப்பப்பட்டது.மட்டை மில்கள் என அழைக்கப்படும் நார் தொழிற்சாலைகளில் கடந்த சில ஆண்டுகளில் பல்வேறு புதிய தொழில் நுட்பங்கள் புகுத்தப்பட்டன. இங்கு தயாரிக்கப்படும் வெள்ளை மற்றும் பழுப்பு நிற மஞ்சி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் வாய்ப்பு கடந்த சில ஆண்டுகளுக்கு முன் கிடைத்தது.

இதையடுத்து, குறுகிய அளவில் மேற்கொள்ளப்பட்டு வந்த நார் உற்பத்தி மத்திய அரசின் கயிறு வாரியத்தின் பல்வேறு மானியங்கள் மற்றும் நிலையான விலை காரணமாக உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் பல மடங்கு அதிகரித்தது.தென்னந்தோப்பு மற்றும் கொப்பரை உற்பத்தி களங்களிலிருந்து வாங்கப்படும் தேங்காய் மட்டைகள் தண்ணீரில் நனைய விடப்பட்டு, இயந்திரங்கள் மூலம் நாராக பிரித்தெடுக்கப்படுகிறது. நார் பண்டல்களாக கட்டப்பட்டு பல்வேறு

பகுதிகளுக்கு விற்பனைக்காக அனுப்பப்படுகிறது.இந்தியாவில், தென்னை நாரிலிருந்து மெத்தை போன்ற சிலவகையான பொருட்களே தயாரிக்கப்படுகிறது. வெளிநாடுகளில் சொட்டு நீர் பாசன முறை, கட்டுமான பணிகள் உட்பட பல்வேறு இடங்களில் தென்னை நார் பயன்படுத்தப்படுகிறது.கடந்த சில மாதங்களாக உடுமலை பகுதியிலிருந்து ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளுக்கு வெள்ளை நார் மஞ்சி ஏற்றுமதி அதிகரித்துள்ளது. மிக தரமான நார் மஞ்சி ரஷ்யாவுக்கும், அடுத்த தரம் சீனாவிற்கும் ஏற்றுமதியாகிறது.30 கிலோ அடங்கிய பண்டல் சீனாவுக்கு சராசரியாக 260 ரூபாய்க்கும், ரஷ்யாவிற்கு 340 ரூபாய் விலையிலும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. கடந்த மாதம் முதல் சீனாவிற்கு ஏற்றுமதி அதிகரித்துள்ளதாக உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.உற்பத்தியாகும் பிற பொருட்கள்:கழிவும் ஏற்றுமதியாகும்: தென்னை நார் கழிவு தயாரிக்கும் மட்டை மில்களில் வெளியாகும் கழிவு "பித் பிளாக்' எனப்படும் கட்டிகளாக மாற்றப்பட்டு, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. மஞ்சி மில்லிலிருந்து மீறும் கழிவுகளை எடுத்து ஜல்லடைகளில் சலித்து, சிறு துகள்கள் மட்டும் பிரித்தெடுக்கப்படுகிறது.பின்னர், இயந்திரங்களில் "ஹைட்ராலிங் பிரசிங்' மூலம் கட்டிகளாக மாற்றப்பட்டு "பித்பிளாக்' தயாரிக்கப்படுகிறது.

ஒரு மணி நேரத்திற்கு 400 முதல் 500 கிலோ வரையும், நாளொன்றுக்கு 4 டன் வரையும் தயாரிக்கப்படுகிறது. சீனா, நெதர்லாந்து, கொரியா போன்ற வெளிநாடுகளுக்கு இந்த பித் பிளாக்குகள் ஏற்றுமதி செய்யப்படுகிறது.இவ்வகை கட்டிகள் ஈரத்தன்மையை உறிஞ்சி வைத்து கொள்வதால் வெளிநாடுகளில் விவசாய பயன்பாட்டுக்கு பயன்படுத்தப்படுகிறது. மேலும், மலைப்பகுதிகளில் மண் சரிவுகளை தடுக்க அமைக்கப்படும் பெல்ட் எனப்படும் அமைப்புகளிலும் அதிகளவு பித் பிளாக்குகள் பயன்படுத்தப்படுவதாக உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.25க்கும் அதிகமான இவ்வகை தொழிற் சாலைகள் உடுமலை பகுதியில் இயங்கி வருகின்றன. கட்டிகள் பெரும்பாலும் கேரளாவிற்கு அனுப்பப்பட்டு பின் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.திண்டுக்கல் - கோவை அகல ரயில் பாதை பணிகளை விரைவில் முடித்து சரக்கு ரயில் இயங்கும் நிலையில் இந்த தொழில் மேலும் மேம்படும் என்பது உற்பத்தியாளர்களின் கோரிக்கையாகும்."கர்லிங்' கயிறுகள்: தரமான தென்னை நார்கள் அதிக இறுக்கத்துடன் கூடிய கயிறுகளாக முறுக்கேற்றப்படுகிறது. இவ்வகை கயிறுகள் மெத்தை தயாரிப்பு நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. அதிக வெப்பத்தில் இவ்வகை கயிறுகள் பிரித்தெடுக்கப்பட்டு மெத்தை தயாரிப்பிற்கு பயன்படுத்தப்படுகிறது. உடுமலை பகுதியில் கர்லிங் இயந்திரங்களை நிறுவி கயிறு தயாரிக்கும் தொழிற்சாலைகள் அதிகளவு உள்ளன.

வேலை வாய்ப்பை தரும் தென்னை நார்:தென்னை நாரிலிருந்து கால் மிதியடி தயாரிப்பதற்காக மகளிர் சுய உதவிக்குழுக்களை சேர்ந்த பெண்களுக்கு கயிறு வாரியத்தினர் உடுமலை,

குடிமங்கலம், மடத்துக்குளம் ஒன்றிய அலுவலகங்கள் மூலம் கடந்த சில ஆண்டுகளாக பயிற்சி அளித்து வருகின்றனர். கொறடோ மேட்,ரோம் மேட்,சின்னெட் மேட், ரவுண்ட் மேட் என அழகிய டிசைன்களில் தென்னை நாரினால் ஆன மிதியடிகள் தயாரிக்க பயிற்சி அளிக்கப்பட்டது.மிதியடிகள் தயாரிப்பதற்கு தேவையான கயிறு உற்பத்தி செய்ய 10 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான இயந்திரங்களும் முழு மானியத்தில் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், விற்பனை சந்தை இல்லாமல் மானியத்தில் வாங்கிய இயந்திரங்களை பெண்கள் வீணாக போட்டு வைத்துள்ளனர். மிதியடிகள் வெளிமார்க்கெட்டில் 25 முதல் 35 ரூபாய் வரை விற்கப்படுகிறது. நாள்தோறும் 200 ரூபாய் வருமானம் கிடைக்குமளவிற்கு வீட்டில் இருந்தபடியே பெண்கள் கயிறு திரிக்கும் தொழிலில் ஈடுபடலாம்.தேவையான விற்பனை சந்தை வாய்ப்புகள் அரசினால் ஏற்படுத்தி தராததால் பெண்கள் இந்த தொழிலை பயிற்சியுடன் முடித்து கொள்கின்றனர். மிதியடிகளுக்கான கயிறு தயாரிக்க வழங்கப்பட்ட இயந்திரங்களும் பெண்களின் வீட்டில் பயன்பாடு இல்லாமல் வீணாகி வருகிறது.அழகிய ஆபரணங்கள்:
எடை குறைவான மஞ்சியிலிருந்து ஆபரணங்களான செயின், டாலர் செயின், நெத்திச்சூட்டி, பிரெஸ்லெட், நெக்லஸ், மோதிரம், வளையல் தயாரிக்கப்படுகிறது. இழுத்தால் அறுந்து போகாத தரத்துடன் தேவையான பாசிகள் இணைக்கப்பட்டு, மனதை அள்ளும் பல ஆபரணங்கள் உருவாக்கப்படுகிறது.தென்னை நாரிலிருந்து நீண்ட இழைகளை மட்டும் பிரித்தெடுத்து, சுடுநீரில் "பிளீச்' செய்து தேவையான கலர்கள் தண்ணீரில் கலந்து பெறப்படுகிறது. பின்னர் தேவைப்படும் ஆபரணங்கள் பயன்படுத்தி எறியப்பட்ட ரீபிள், ஊசி ஆகியவை உதவியுடன் தயாரிக்கப்படுகிறது.இதற்கான சிறப்பு பயிற்சி உடுமலை பகுதியிலுள்ள மலைவாழ் மக்களுக்கும், பெண்களுக்கும் கயிறு வாரியத்தால் வழங்கப்பட்டது. அதிக வேலைப்பாடு மிகுந்த இந்த ஆபரணங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி வாய்ப்புகள் மிகுந்துள்ளதாக கருதப்பட்டது. உடுமலை பகுதியில் நூற்றுக்கணக்கான பெண்கள் இந்த பயிற்சியை பெற்றனர். ஆனால், போதுமான சந்தை வாய்ப்புகள் கிடைக்கவில்லை. கலையம்சம் மிகுந்த பொருட்களை நாரிலிருந்து உருவாக்கும் தங்களுக்கு தொழிலை தொடர தேவையான விற்பனை சந்தையை அரசு ஏற்படுத்தி தர வேண்டும் என பெண்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். உடுமலையும் ஆகும் டாலர் சிட்டி: உடுமலை பகுதியில் தென்னை நார் சார்ந்த சிறிய அளவிலான தொழிற்சாலைகளும், பல்வேறு தொழில்களும் ஒருங்கிணைப்பு இல்லாமல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மத்திய, மாநில அரசுகள் ஒருங்கிணைந்து உடுமலை பகுதியில் நார் பொருட்கள் ஏற்றுமதிக்கான மையத்தை அமைக்க வேண்டும். இந்த மையத்தின் மூலம் தென்னை நார் முதல் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் அனைத்தையும் ஏற்றுமதி செய்யப்பட வேண்டும். அரசு கண்காணிப்பு மற்றும் வழிகாட்டுதலில் ஏற்றுமதி செய்வதுடன், இந்த மையத்தில் உற்பத்தி பொருட்களை இருப்பு வைக்க தேவையான வசதிகளையும் ஏற்படுத்த வேண்டும்.இதர கட்டமைப்புகளான

போக்குவரத்து, நிலையான மூலப்பொருள் ஆகியவற்றிலும் அரசு கவனம் செலுத்தினால், தென்னை நார் சார்ந்த பொருட்கள் ஏற்றுமதியால் திருப்பூருக்கு அடுத்தபடியாக அன்னிய செலவாணியை ஈட்டும் பகுதியாக உடுமலை மாறும் என உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

**கொள்முதல் விலை சரிவால் பீட்ரூட் அறுவடை நிறுத்தம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 07,2010,22:12 IST

சுல்தான்பேட்டை : பீட்ரூட் கொள்முதல் விலை சரிந்ததால், சுல் தான் பேட்டை பகுதி விவசாயிகள் அறுவடையை தற்காலிகமாக நிறுத்தியுள்ளனர்.

சுல்தான்பேட்டை பகுதியில் ஜல்லிப்பட்டி, செலக்கரிச்சல்,கேத்தனூர், மானாசிபாளையம், கரடிவாவி, குள்ளம்பாளையம் உட்பட பல இடங்களில் 1,000 ஏக்கர் பரப்பளவில் பீட்ரூட் சாகுபடி செய் யப்பட்டுள்ளது. ஒரு ஏக்கர் சாகுபடி முதல் அறுவடை வரை விவசாயிகளுக்கு ரூ.15 ஆயிரம் செலவாகிறது. பீட்ரூட்கள், பல்லடம்,கோவை, திருப்பூர் மற்றும் கேரளா பகுதிகளுக்கு விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

கடந்த பருவத்தை விட இப்பருவத்தில், நெகமம், பொள்ளாச்சி, உடுமலை ஆகிய இடங்களில் மிக அதிக பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அதிகப்படியான விளைச்சல் காரணமாக கொள் முதல் விலை கிலோ ரூ.10ஐ தாண்டாமல் உள்ளது.

கடந்த வாரம் சுல்தான்பேட்டை பகுதி விவசாயிகளிடம் ஒரு கிலோ பீட்ரூட் ஏழு ரூபாய்க்கு வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்பட்டது. இந்நிலையில், திருப்பூர், கோவை பகுதிகளில் தொடர் மழை; தீபாவளி பண்டிகைக்கு வெளிமாவட்ட தொழிலாளர்கள், கோவை மற்றும் திருப்பூர் பகுதிகளில் இருந்து சொந்த ஊருக்கு புறப்பட்டு சென்றது ஆகியவற்றால் மார்க்கெட்டுகளில் காய்கறி விற்பனை மந்தமாகியுள்ளது.
இதன்காரணமாக, தற்போது கிலோ நான்கு ரூபாய்க்கு மட்டுமே கொள்முதல் செய்யப்படுகிறது. இவ்விலை கட்டுப்படியானதாக இல்லாததால், சுல்தான்பேட்டை பகுதியில் உள்ள பீட்ரூட் விவசாயிகள், அறுவடையை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளனர்.

**மக்காச்சோளம் விதைத்தேர்வில் அதிக கவனம் செலுத்த அறிவுரை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 07,2010,04:05 IST

உடுமலை:"மக்காச்சோளம் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகள், விதை தேர்வில் அதிக கவனம் செலுத்த வேண்டும்' என, விதைச்சான்று துறையினர் தெரிவித்துள்ளனர்.விதை ஆய்வு துணை இயக்குனர் பொன்னுசாமி நடேசன் வெளியிட்டுள்ள அறிக்கை:பி.ஏ.பி., மற்றும் அமராவதி பாசனத்தில் வரும் சீசனில் மக்காச்சோளம் பயிரிடும் விவசாயிகள் விதை தேர்வில் அதிக கவனம் செலுத்த வேண்டும். கிராமங்களில் விளம்பரம் செய்யும் விற்பனை உரிமம் இல்லாதவரிடம் விதையை வாங்கக்கூடாது.விதைப்பையில் விதை பெயர், ரகம், முளைப்பு திறன், புறத்தூய்மை, இனத்தூய்மை, குவியல் எண், காலாவதி நாள் மற்றும் பிற குறிப்புகளை பார்த்து வாங்க வேண்டும்.விற்பனை பட்டியலை அவசியம் பெற்று பட்டியலில் வாங்குவோரின் முகவரி, விதையின் பெயர், ரகம், காலாவதி நாள் உள்ளிட்ட விபரங்கள் குறிக்கப்பட்டுள்ளதை கண்காணித்து கையெழுத்திட்டு வாங்க வேண்டும்.விதையின் தரத்தில் சந்தேகம் இருந்தால் விதைச்சான்று துறை அல்லது வேளாண் துறையை தொடர்பு கொள்ளலாம்.

விதைச்சான்று துறை சார்பில், தனியார் மற்றும் கூட்டுறவு துறை விற்பனை நிலையங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள 200க்கும் அதிகமான விதை குவியல்களில் இருந்து விதை மாதிரிகள் சேகரிக்கப்பட்டு முளைப்பு திறன், புறத்தூய்மை மற்றும் இனத்தூய்மை பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது.தரக்குறைவான விதைகள் இருந்தால், விற்பனை தடை உட்பட பல்வேறு நடவடிக்கைகள் விதை சட்டத்தின் கீழ் எடுக்கப்படும். விவசாயிகள் விதைச்சான்று துறையுடன் ஒத்துழைத்து, நல்ல விதைகள் வாங்கி பயன் பெற வேண்டும், என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ராஜராஜன் 1,000 நெல் சாகுபடி கி.புரம் பகுதியில் துவக்கம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 07,2010,04:23 IST

லாலாப்பேட்டை: கிருஷ்ணராபுரம் தாலுகா பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் மழையையடுத்து, அப்பகுதி விவசாயிகள் "ராஜராஜன் 1000' நெல் சாகுபடி பணியை துவக்கினர். கிருஷ்ணராபுரம் தாலுகாவுக்கு உட்பட்ட கட்டளை, பாலராஜபுரம், வீரராக்கியம், மணவாசி, மாயனூர், மகாதானபுரம் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள நஞ்சை நிலங்களில் செம்மை நெல் சாகுபடி நடந்து வருகிறது. தற்போது இப்பகுதியில் பருவ மழை தொடர்ந்து பெய்து வருவதால் சாகுபடிக்கு தேவையான தண்ணீர் தற்காலிகமாக தடையின்றி கிடைக்கிறது. மழைநீரை பயன்படுத்தி

அப்பகுதி விவசாயிகள் ராஜராஜன் 1,000 தொழில்நுட்பத்தில் நெல் நடவு செய்யும் பணிகளை துவக்கியுள்ளனர்.
நாற்று பயிர் உற்பத்தி மற்றும் நடவு பணிகளில் விவசாயிகள் ஆர்வமுடன் ஈடுபட்டு வருகின்றனர்.

கிருஷ்ணராயபுரம் வேளாண் உதவி இயக்குனர் (பொ) பாலகிருஷ்ணன் கூறியதாவது: வடகிழக்கு பருவமழை துவங்கியுள்ளதால், கிருஷ்ணராயபுரம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் தற்போது ராஜராஜன் 1000' செம்மை நெல் சாகுபடி மூலம் நடந்து வருகிறது. இப்பகுதி 1,510 ஹெக்டேர் பரப்பளவில் ஒற்றை நெல் நடவு முறையில் செம்மை நெல் சாகுபடிக்கான பணிகள் துரிதமாக நடக்கிறது. இந்த வட்டாரப் பகுதியில் 3,000 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் செம்மை நெல் சாகுபடி செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**டி.ஏ.பி., உரம் தனியார் உரநிலையத்திலும் விற்பனை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 07,2010,04:11 IST

பெரம்பலூர்: பெரம்பலூர்- அரியலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ரெகுநாதன் வெளியிட்ட அறிக்கை: தமிழக அரசு உத்தரவின்படி இதுவரை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் மட்டும் விற்பனை செய்யப்பட்ட டை அம்மோனியம் பாஸ்பேட் என்ற டி.ஏ.பி., உரம் இனி வரும் காலங்களில் தனியார் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். இனி வரும் காலங்களில் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் டி.ஏ.பி., உரத்தினால் தனியார் உர விற்பனை நிலையங்களுக்கு 50 சதவீத டி.ஏ.பி., உரங்கள் ஒதுக்கிடு செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படும். ஒரு மூடை டி.ஏ.பி., உரத்தின் விலை 517.40 ரூபாயாகும். விவசாயிகள் டி.ஏ.பி., உரம் வாங்கும்பொழுது உர மூடையின் மேல் உள்ள விலையினை சரிபார்த்து பில் கேட்டு வாங்க வேண்டும்.

**செம்மை கரும்பு சாகுபடி விளைச்சல் அதிகமாகும்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 07,2010,03:19 IST

மதுரை : "" செம்மை நெல் மட்டுமல்ல, செம்மை கரும்பு சாகுபடி செய்தாலும், விளைச்சல் அதிகரிக்கும்," என, மதுரை விவசாயக் கல்லூரி பேராசிரியர் கணேசராஜா தெரிவித்துள்ளார்.

அவர் கூறியதாவது : பயிர்களை அதிக இடைவெளியில் நட்டு, அவற்றுக்குத் தேவையான தண்ணீர், சூரியஒளி, உரம் கொடுக்கும் போது அதிக வளர்ச்சியும், விளைச்சலும் கிடைக்கும்.

கரும்பு சாகுபடியில் வழக்கமாக, இரு பரு கரணைகளை நடுவோம். ஒரு கரணையை மட்டும் தனியாக ஒரு சீவல் ஆக எடுத்து, அதை தென்னை நார்க்கழிவு நாற்றுக் குழியில் நட்டு, தனித்தனி நாற்றுகளாக வளர்க்க வேண்டும். 30 - 35 நாட்கள் கழித்து, நாற்றுகளை எடுத்து, வரிசைக்கு வரிசை ஐந்தடி இடைவெளியும், நாற்றுக்கு நாற்று இரண்டடி இடைவெளி விட்டு, நடவேண்டும். அளவான நீரை பாய்ச்சுவதுடன், இயற்கை உரங்களையே இடவேண்டும். விளைச்சல் அதிகம் : ஒரு ஏக்கருக்கு பழைய முறையில் நான்கு டன் கரணைகள் தேவைப்படும். செம்மை முறையில் 50 கிலோ கரணைகள் போதும்.

தனியாக நாற்றங்கால் தயாரித்து, வளர்ச்சிக்கேற்ப தரம் பிரிக்கலாம். தண்ணீர்த் தேவை குறையும், ஒரு பயிரிலிருந்து கிளைவிடும் முளைகளின் எண்ணிக்கை அதிகமாகும். காற்று மற்றும் சூரிய ஒளி புகுவதற்கான சாத்தியக்கூறு அதிகமாக உள்ளதால், பயிர் செழித்து வளரும். ஊடுபயிர் செய்வதற்கு வாய்ப்பு அதிகம். நவ., டிசம்பர் மாதங்களில் கரும்பு பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள், செம்மை சாகுபடி முறையை பின்பற்றினால் அதிக விளைச்சலைப் பெறலாம். அலங்காநல்லூர் வளாகத்தில் உள்ள தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலையில் நடப்பட்டுள்ள செம்மை கரும்பு சாகுபடியை நேரடியாக விவசாயிகள் பார்வையிடலாம், என்றார் பேராசிரியர் கணேசராஜா.

**தேனி மாவட்டத்தில் பீட்ரூட் விளைச்சல் .அமோகம்: விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 07,2010,23:52 IST

தேனி: தேனியில் பீட்ரூட் விளைச்சல் அதிகரித்துள்ளதுடன் நல்ல விலையும் கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தேனி மாவட்டம் குளிர்ச்சியான தட்ப வெப்ப நிலை நிலவும் மலையும் மலை சார்ந்த பகுதிகளை கொண்டது. அதிகளவில் குளிர்ப்பகுதிகளில் விளையக்கூடிய காய்கறிகள் இங்கு விளைவிக்கப்படுகின்றன. குறிப்பாக முட்டைகோஸ், காலிபிளவர் போன்றவை மாவட்டத்தில் அதிகளவில் விளைவிக்கப்படுகின்றன. இதற்கு அடுத்தபடியாக பீட்ரூட் உள்ளது. மாவட்டத்தில் மாணிக்காபுரம், காமராஜபுரம், சடையால்பட்டி, உப்புக்கோட்டை, சின்னமனூர், சில்லமரத்துப்பட்டி, சிந்தலைச்சேரி, தேவாரம் பகுதிகளில் சுமார் 500 ஏக்கரில் பீட்ரூட் சாகுபடியாகிறது. பெரும்பாலும் பருத்தி, கரும்பு பயிர்களில் ஊடுபயிராக சாகுபடி செய்யப்படுகிறது. ஒரு ஏக்கர் சாகுபடி செய்தால் 40 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைக்கிறது. அதுவும் மூன்றே மாதத்தில் அறுவடை முடிந்து விடுகிறது. தேனி அருகே மாணிக்காபுரத்தை சேர்ந்த விவசாயி அய்யனார் கூறியதாவது: பத்து ஆண்டுகளாக பீட்ரூட் விவசாயம் செய்து வருகிறேன். தற்போது ஒரு ஏக்கர் 20 சென்ட் நிலத்தில் பீட்ரூட் சாகுபடி செய்துள்ளேன். பருத்திக்கு ஊடுபயிராக பயிரிட்டுள்ளேன். சுல்தான் ரக பீட்ரூட்களே இங்கு அதிகம் சாகுபடி ஆகிறது. மொத்தம் 30 ஆயிரம் ரூபாய் சாகுபடி செலவாகிறது. 80 முதல் 120 மூடை (10000

கிலோ) விளைச்சல் கிடைக்கிறது. கிலோ எட்டு ரூபாய் வரை விலை போகிறது. நல்ல விலை கிடைக்கிறது. தற்போது மழை பெய்து வருவதால் பீட்ரூட் வயல்களில் அழுகி விடுகின்றன. இருப்பினும் நல்ல விலை கிடைப்பதால் பாதிப்பில்லை என்றார்.

**மாவட்டத்தில் பெய்த மழை மானாவாரி பயிர்கள் தப்பின**

பதிவு செய்த நாள் : நவம்பர் 07,2010,00:47 IST

ஆண்டிபட்டி : மாவட்டத்தில் பெய்து வரும் மழையால் மானாவாரி தோட்டக்கலை பயிர்கள் வறட்சியில் இருந்து தப்பின. தேனி மாவட்டத்தில் மா 8500 எக்டேர், நெல்லி 250 எக்டேர், கொட்டைமுந்திரி 5600 எக்டேர், இலவம்பஞ்சு 7 ஆயிரம் எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த 4 மாதமாக மழை இல்லாமல் வறட்சி காணப்பட்டது. கடந்த 10 நாட்களாக பெய்யும் மழையால் இந்த பயிர்கள் புத்துயிர் பெற்றுள்ளன. மழையால் நல்ல ஈரப்பதம் கிடைத்து, நிலத்தடிநீர் மட்டம் உயர்ந்துள்ளது. தற்போது மானாவாரி பயிர்கள் வளர்ச்சி நிலையில் உள்ளன. தற்போது கிடைத்துள்ள மழை மூலம் முன்பருவ வளர்ச்சி நல்ல முறையில் இருக்கும். இதன் மூலம் நடப்பாண்டு விளைச்சல் அதிகம் கிடைக்கும். நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளதால் 4500 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ள வாழைகளுக்கு நீர் கிடைத்து வருகிறது.

**சர்க்கரை, சூரியகாந்தி எண்ணெய் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 07,2010,00:57 IST

விருதுநகர் : விருதுநகர் மார்க்கெட்டில் சர்க்கரை விலை மூடைக்கு 60 ரூபாயும், சூரியகாந்தி எண்ணெய் டின்னுக்கு 20 ரூபாயும் உயர்ந்துள்ளது. கொண்டைக்கடலை, பொரிகடலை மூடைக்கு தலா 100 ரூபாய் குறைந்துள்ளது. விருதுநகரில் கடந்த வாரம் சர்க்கரை விலை மூடைக்கு 2,745 ரூபாயாக இருந்தது. தற்போது 2,805 ரூபாயாக உள்ளது. மைதா மூடைக்கு 2,190 ரூபாயாகவும், ரவை 2,260 ரூபாயாகவும் உள்ளது. கடந்த வாரம் சூரியகாந்தி எண்ணெய் விலை டின்னுக்கு 1,120 ரூபாயாக இருந்தது. தற்போது 1,140 ரூபாயாகவும், கடலெண்ணெய் 1,200 ஆகவும், 805 ஆக இருந்த பாமாயில் 810 ஆகவும், 3,500 ஆக இருந்த நிலக்கடலைப் பருப்பு 3,400 ஆகவும், கடலைப்புண்ணாக்கு 2,400 ரூபாயாகவும் உள்ளது.

கடந்த வாரம் கொண்டைக் கடலை விலை மூடைக்கு 2,550 ரூபாயாக இருந்தது. தற்போது 2,450 ஆகவும்,1,970 ஆக இருந்த பொரிகடலை 1,870 ரூபாயாகவும் உள்ளது. நயம் உளுந்து விலை மூடைக்கு 4,400 ரூபாயிலிருந்து 4,500 வரையும், சுமார் ரக உளுந்து 3,900த்திலிருந்து 4,000 வரையும், பர்மா பருவட்டு உளுந்து 5,000 ஆகவும், பொடி உளுந்து 4,400 ரூபாயாகவும் உள்ளது. உளுந்தம் பருப்பு 6,000 ரூபாயாகவும், பொடி உளுந்தம் பருப்பு 5,500 ரூபாயாகவும், துவரை

3,900 ஆகவும்,பொடி துவரை 3,100 ஆகவும், துவரம் பருப்பு 5,600 ஆகவும், பொடி துவரம் பருப்பு 4,600 ஆகவும், பாசிப்பயறு 4,100லிருந்து 4,200 வரையும், சுமார் ரகம் 3,800 ஆகவும், பாசிப்பருப்பு 5,400 லிருந்து 5,500 வரையும், சுமார் ரக பாசிப்பருப்பு 5,200 ரூபாயாகவும் உள்ளது. மிளகாய் வத்தல் விலை குவிண்டாலுக்கு 3,000 ரூபாயிலிருந்து 3,250 வரையும், சங்கரன்கோவில் வத்தல் 4,500 லிருந்து 4,750 வரையும், முண்டு வத்தல் 3,500 ஆகவும், பழைய சோடை வத்தல் 2,000 ஆகவும், புது சோடை வத்தல் 2,500 ரூபாயாகவும் உள்ளது.

**பேய்க்குளம் அருகே விவசாயிகளுக்கு நெல் சாகுபடி பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 07,2010,03:15 IST

பேய்க்குளம்: பேய்க்குளம் அருகே விவசாயிகளுக்கான நெல் சாகுபடி பயிற்சி முகாம் நடந்தது.பேய்க்குளம் கிராம சமுதாய நலக்கூடத்தில் நடந்த விவசாயிகளுக்கான ராஜராஜன் 1000 நெல் சாகுபடி பயிற்சி முகாமிற்கு பேய்க்குளம் விவசாயிகள் சங்க தலைவர் சங்கரலிங்கம் தலைமை வகித்தார். பயிற்சி ஒருங்கிணைப்பாளர் ரமேஷ் அனைவரையும் வரவேற்றார். தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் உலக பாங்க் ஆகியவை இணைந்து கருமேனி ஆறு பாசன பகுதியில் செயல்படுத்தப்படும் நீர்வள, நிலவள திட்டத்தின் கீழ் கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரி பேராசிரியர்கள் விவசாயிகளுக்கு நெல் சாகுபடி தொழில் நுட்பங்களைப் பற்றி விளக்கமளித்தனர். நாற்றங்கால், நடவு வயல் மற்றும் களை மேலாண் மை குறித்து மண் மற்றும் பயிர்கள் துறை தலைவர் பேராசிரியர் சுந்தர்சிங் ராஜபாண்டியன் பேசினார். உர நிர்வாகம் மற்றும் ஊட்டச்சத்து பற்றாக்குறை குறித்து உதவி பேராசிரியர் சீனிவாசன், பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாடு முறைகள் குறித்து பூச்சியியல் துறை உதவி பேராசிரியர் ஆல்வின் ஆகியோர் பேசினர். இதில் சுமார் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். இளநிலை ஆராய்ச்சியாளர் செல்விராஜலெட்சுமி நன்றி கூறினார்.

**வெற்றிலை சாகுபடிக்கு மானிய உதவி வழங்கல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 07,2010,23:51 IST

தேவதானப்பட்டி: மாவட்டத்தில் வெற்றிலை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானிய உதவிகள் வழங்கப்படுகின்றன. வெற்றிலை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஒரு எக்டேருக்கு 7500 ரூபாய் மதிப்புள்ள உரம், மருந்துகள் மானியமாக வழங்கப்படுகின்றன. வாடல்நோய், இலைசுருட்டல், இலைப்புள்ளிநோய் போன்றவற்றிக்கு மருதுகளும், இயற்கை உரங்களும் மானியமாக வழங்கப்படும். மாவட்டத்தில் 100 எக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ள

வெற்றிலைக்கு உதவிகள் வழங்கப்படும். தேவைப்படும் விவசாயிகள் அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள தோட்டக்கலை உதவிஇயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

## கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் நியாயமான விலை வழங்க கோரி விவசாயிகள் முற்றுகை போராட்டம்

*குன்னூர், நவ.8–*

*கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் நியாயமான விலை வழங்க கோரி விவசாயி கள் முற்றுகை போராட் டம் நடத்த முடிவு செய்து உள்ளனர்.*

*குறைவான விலை*

*நீலகிரி மாவட்டத்தில் பல ஆயிரக்கணக்கான சிறு விவசாயிகள் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்கள் தொழிற்சாலை களுக்கு பச்சை தேயிலைகளை வழங்கி வருகிறார்கள். விவசாயிகள் வழங்கும் பச்சை தேயிலைக்கு கூட்டுறவு தொழிற்சாலைகளில் குறைந்த விலையே வழங்கப்படுகிறது. இந்த விலை தனியார் தேயிலைகளை காட்டிலும் மிகவும் குறைவாக உள்ளது. இதனால் விவசாயிகள் பெரும் பாதிப்படைகிறார்கள். மேலும் கூட்டுறவு தொழிற்சாலை களில் கடனில் இருப்பதால், அதனை ஈடுபட்ட விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய பச்சைதேயிலை விலையில் கிலோ ஒன்று ரூ.1 முதல் ரூ.2 வரை பிடித்தம் செய்வதாகவும் கூறப்படுகிறது. இதனால் விவசாயிகள் கூட்டுறவு தொழிற்சாலைகள் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தி வருகிறார்கள்.*

*பொதுக்குழு கூட்டம்*

*இந்த நிலையில் இதற்கு நிரந்தர தீர்வு ஏற்படுத்த கிராம சிறு தேயிலை விவசாயிகள் சங்கத்தின் சிறப்பு பொதுக் குழு கூட்டம் மேலூர் கிராம சமுதாய கூடத்தில் நடை பெற்றது. கூட்டத்துக்கு சங்க தலைவர் ராமன் தலைமை தாங்கினார். சங்க செயலாளர் நஞ்சுண்டன், பொருளாளர் சரவணன் உள்பட சங்க உறுப்பினர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர். மேலும் சிறப்பு அழைப்பாளர்களாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்ட செயலா ளர் ஆர்.பத்ரி, விவசாய தொழி லாளர் சங்க தலைவர்கள் ராஜன், சுப்ரமணி ஆகியோரும் கலந்து கொண்டனர்.*

*கூட்டத்தில், கூட்டுறவு தொழிற்சாலைகளில் வழங்கப் படும் விலை நியாயமாகவும்,*

சீராகவும் இருக்க வேண்டும். கூட்டுறவு நிறுவனத்தின் குளறுபடியான நிர்வாகத்தால் ஏற்பட்ட கடனை காரணம் காட்டி சிறு தேயிலை விவசாயிகளின் விலையில் பிடித்த செய்வதை கைவிட வேண்டும்.

முற்றுகை போராட்டம் நடத்த முடிவு

கூட்டுறவு (இன்கோ) தொழிற்சாலை நிர்வாகம் மாதாமாதம் விவசாயிகளின் பிரதிநிதிகளை அழைத்து பேசி, அவர்களின் கோரிக்கை களை நிறைவேற்ற வேண்டும். தொழிற்சாலை நிர்வாகங் களின் அலட்சியத்தால் நஷ்டம் ஏற்படுவதையும், அதன் தொடர்ச்சியாக தொழிற்சாலை மூடப்படு நிலை ஏற்படுவதையும் தடுத்து நிறுத்த வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கிராம சிறு தேயிலை விவசாயிகள் சங்கம் மற்றும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் இணைந்து மிக விரை வில் கைக்காட்டி கூட்டுறவு தொழிற்சாலை முன்பு ஆயிரக் கணக்கான சிறு விவசாயிகளை திரட்டி முற்றுகை போராட்டம் நடத்துவது, கோரிக்கைகள் தீர்க்கப்படாவிட்டால் மாவட் டம் முழுவதும் உள்ள சிறு தேயிலை விவசாயிகளை திரட்டி குன்னூரில் உள்ள இன்கோ தலைமை அலுவ லகத்தை முற்றுகையிடுவது என்பது போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.